வைத்திய கலாநிதி

THE VAIDYA KALANIDHI

EDITOR
Pandit M. Duraiswami Aiyangar,
Ayurveda Bhushan.

பத்திராதிபர்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்
ஆயுர்வேத பூஷண

ஸ்தகம் 1. Vol. 1. | ஆனந்த வருஷ வைகாசி மீ —JUNE—1914. | ஸஞ்சிகை 10. No. 10.

TREATMENT OF TUBERCULOSIS.

க்ஷய ரோக சிகித்ஸை.

By

Dr. E. V. SRINIVASA CHARI, M. B. & C. M.

Physician Surgeon & OPhtholmic Specialist.

க்ஷய ரோகத்தைத் தடுக்கக் கூடிய முயற்சி
ள்:— (1) ஜனங்கள் விசேஷமாகப் படித்து
ருவதுடன், ஆங்காங்கு ஆரோக்கிய பரிபால
த்திற்காக ஸங்கங்கள் ஸ்தாபித்து, இக்
ண்டிய வியாதியின் உண்மைகளையறிய வேண்
டும். (2) விஷூசி யென்கிற காலரா, ப்லேக்
முதலிய பெருவாரி நோய்கள் ஓரிடத்தில்
ண்டால் அதை உடனே கவர்ன்மெண்டா
ருக்குத் தெரியப்படுத்துவது போலவே, இவ்
வியாதி ஒருவனுக்கு உண்டாயிருப்பதாய்
அறிந்தவுடனே இவ்விஷயத்தையும் ஸர்க்கா
திகாரிகளுக்குத் தெரியப்படுத்தும்படி ஏற்
பாடு செய்வது நலம். (3) ஏழைகள் வாஸம்
செய்யுமிடங்கள் வெகு சுத்தமாயிருக்கும்
படி கவனிக்க வேண்டும். (4) தெருக்கள்
முதலிய கண்ட விடங்களிலும் ஜனங்கள் எச்
சில் உமிழ்வதைத் தடுப்பதற் கேற்ற ஏற்பாடு
கள் செய்யலாம். (5) நாள்ப்படாததும் எளி
தில் ஸ்வஸ்த்தமாகக் கூடியதுமான க்ஷய
ரோகமுள்ளவர்களுக்கும், நாள்ப் பட்டதும்
எளிதில் சிகித்ஸைக்கு வசப்படாததுமான
க்ஷயரோகமுள்ளவர்க்கும் பிரத்தியேகமாக
ஆரோக்கியமான வாஸஸ்தலங்களை ஏற்படுத்து
வது அவசியம். (6) க்ஷய ரோகிகளுக்கு மட்டும்
தனியாக வைத்தியசாலைகளும், ரோகிக
ளுடைய வீடுகளுக்குப் போய் அப்பிணியாட்
களுக்குத் தகுந்த உபசாரம் செய்யக் கூடிய
தாதிகளும் இருக்க வேண்டும். (7) இப்
பிணியாளருடைய கோழை எச்சில் முதலிய
வற்றை ஜாக்கிரதையாய்ப் பார்க்க வேண்டும்:
—என்றால் அவற்றை நெருப்பிலிட்டு எரித்து
விடலாம், அல்லது ஜனங்களிடம் எவ்விதத்
திலும் ஸம்பந்திக்காதபடி ஜலத்தில் கொட்டி
விடலாம். (8) க்ஷயரோகிக்குப் பிறந்த
குழந்தைகளுக்கு ஜலதோஷமும் இருமலும்
சிறிதும் உண்டாகாதபடி வெகு ஜாக்கிரதை
யாக அவற்றைப் பாதுகாக்கவேண்டும்.
பாலையே அக்குழந்தைகளுக்கு உணவாகக்
கொடுத்து வருவது நலம். (9) எந்தக் குடும்பத்
திலாவது எவருக்காவது இவ்வியாதி ஸம்பவிக்
கக் கூடு மென்கிற ஜாடை தோன்றியவுடனே,
அக்குடும்பத்திலுள்ளவர் அனைவருமே மிக
ஆரோக்கியம் தரக்கூடிய இடங்களில் சென்று
வாஸம் செய்யவேண்டியதுடன், எந்த நப
ருக்கு இதன் குறிகள் காணப்பட்டனவோ

அவன் இன்னும் வெகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

சிகித்ஸை:—க்ஷய ரோகிகளில் சிலருக்கு யாதொரு சிகித்ஸையுமில்லாமலே அவ்வியாதி தனக்குத் தானே நிவ்ருத்தியாய் விடுவதாகக் கேள்விப்படுகிறோம். ஆகிலும் அப்படிப் பட்டவர்களுடைய கழுத்தில் காய்ப்புகளைப் போன்ற சில கிரந்திகள் (Tubercular Scars) காணப்படுவதுண்டு. இந்த ரோகிகளுக்கு சரீரத்தைப் போஷிக்கக் கூடிய உணவு முதலிய வற்றைக் கொண்டே ஸாதாரணமாய் சிகித்ஸை செய்து வரவேண்டும். உட்கொண்ட உணவானது ஜீர்ணமாய் அதன் ஸத்து இரத்தத்துடன் நன்றாகக் கலந்து வருமானால் ரோகம் அனேகமாய் குணமாய் விட்டதாகவே கூறலாம். க்ஷயரோகத்தினால் வருந்துகிறவர்களுடைய தேஹம் கிரமமாக புஷ்டியடைந்து வருமானால், ரோகமும் தனக்குத் தானே நிவ்ருத்தியாகிற நிலைமைக்கு வந்து விடும். இப்பிணியாளிகள் எப்பொழுதும் மிகவும் சுத்தமான காற்று உலாவுமிடங்களில் வஸிப்பது அவசியம் பட்டணங்களில் சுத்தமான வாயு அரிதாயிருக்கும். ஆனால் பெரும்பாலும் இவ்விஷயம் வைத்தியர்கள் எச்சரிக்கையுடன் செய்யும் ஏற்பாடுகளைப் பொருத்தியதாயிருக்கும், ரோகி படுத்திருக்கும் அறையில் ஸூரியவெளிச்சம் ஏராளமாயிருக்கும்படிச் செய்யவேண்டும். இந்நோயாளிக்கு ஜ்வரமும் தொடர்ந்து வருமானால் பகற்பொழுதில் பெரும்பாலும் படுக்கையிலேயே படுத்திருப்பது அவசியம். மழையும் குளிர்காற்றுமில்லாத காலங்களில் ஜன்னல்களை நன்றாகத் திறந்து வைத்திருக்க வேண்டும்; அப்பொழுதுதான் வேண்டியளவு காற்று அடிக்கடி உள்ளே தாராளமாய் உலாவ வழியுண்டு. தேஹத்தில் வேண்டியவளவு சூடு இராமற் போவது, ஜ்வரம், இராத்காலங்களிலுண்டாகும் வியர்வை, காறியுமிழும்போது எச்சிலில் இரத்தங் கலந்து வருதல் இவ்வித கோளாறுகள் இருந்தபோதிலும், நல்ல காற்று நேராக மேலே அடிக்கடியும் படுவதால் ஒருவித தோஷமுமில்லை. ஜனஸங்கமில்லாத நாட்டுப் புறங்களில் நல்ல காற்று ஏராளமாகக் கிடைக்கும். அவ்விடங்களில் தாழ்வாரங்களிலும், திறந்த வெளியான மேல் மெத்தைகளிலும், மற்றும் அறை போன்ற வேறிடங்களிலும் அதிக காற்று மேலே நேராக வீசி யடிக்காதபடி சரீரத்தைத் தகுந்த வஸ்திரங்களால் போர்த்துக் கொள்வது நலம்.

ஆரோக்கிய ஸ்தலங்களில் வஸித்தல்:—உஷ்ணகாலங்களில் மிகவும் பரிசுத்தமான பிரதேசங்களில் (Sanatoria) போய் வஸிப்பது உத்தமம். அப்படிப்பட்ட விடங்களில் க்ஷய ரோகிகள் வாஸம் செய்வதற்கேற்ற இடங்களை ஏற்படுத்துவது அவசியம். சீதோஷ்ண ஸ்திதிகளால் உண்டாகக் கூடிய குணாகுணங்களைப்பற்றி இன்னும் நன்றாக ஆராய்ச்சி செய்யவில்லை. ஆகிலும் பொதுவாக ஆங்காங்குள்ள இடங்களைப்பற்றி சிறுவாறு சில தத்துவங்கள் தெரிந்துகொள்ளக் கூடும். சென்னப்பட்டணத்திற்கு அருகிலுள்ள பல்லாவரம் என்னும் ஊரானது க்ஷய ரோகிகளுக்கு ஆரோக்கியத்தை யளிக்கக் கூடிய சிறந்த இடமென்று கூறப்படுகிறது. இவ்விதமாக பொதுவான சில உபாயங்களைக் கொண்டும், ட்யுபர்குலின் (Tuberculine) என்கிற ஒருவித நவீன ஔஷதத்தை ஸூசிகாபரணம் (Hypodermic injection) என்கிற உபாயத்தினால் இரத்தத்தில் செலுத்தி செய்யப்படும் சிகித்ஸாமுறையைக் கொண்டும் இவ்வியாதியை குணப்படுத்தலாமே யன்றி வேறு விதமான சிகித்ஸையினால் இது ஸ்வஸ்தமாகுமென்று எமக்குத் தோன்றவில்லை. இரத்தத்தில் ஔஷதத்தைச் செலுத்தும்

முறையும் யாவராலும் ஒப்புக் கொள்ளக் கூடியதா யிராமற்போனாலும், ஆரோக்கிய ஸ்த்தலங் களுக்குப் போக முடியாத க்ஷய ரோகிகளுக்கு அதைப் பிரயோகிப்பது நலமென்றே நினைக்கிறோம். திரவியமும், தகுந்த மனுஷிய ஸஹாயமு மில்லாத ரோகிகளை தூரத்திலுள்ள ஆரோக்கிய ஸ்த்தலங்களுக்குப் போகும்படி நிர்ப்பந்திப்பது பயன்படாத முயற்சியேயாகும்.

பலவித ஆஹாரங்களால் நிவாரணம் செய்தல்—இவ்விஷயம் முக்கியமாய் அவரவருடைய ஜீர்ணசக்தியைப் பொருந்தியதாயிருக்கும். ஆமாசய மென்னும் இரைப்பையைப் பற்றிய கோளாறுகளில் ஆஹாரவகைகளால் க்ஷயரோகத்திற்கு நிவ்ருத்தியுண்டாவது மிக அரிது. வியாதியின் ஆரம்பத்திலேயே அன்னத் துவேஷமும் பசிக்குறைவும் ஏற்படுவதால் க்ஷய ரோகம் ஸ்வஸ்த்தமாவது கஷ்டம். நல்ல காற்றுள்ள விடங்களுக்குப் போவதும் ஸமுத்தி ரயாத்திரை செய்வதும் இதற்குத் தகுந்த பரிஹாரங்களாகும். இவ்விரண்டும் ஸாத்தியமில்லாம லிருந்து, ஜ்வரமும் தொடர்ந்திருந்தால் அப்பொழுது ரோகிக்கு சிரமம் உண்டாகாதபடி அவனை வெகு ஸுகமாக அமர்ந்திருக்கச் செய்து, பகற் காலங்களில் திறந்த வெளிகளில் இருக்கச் செய்வது மல்லாமல், ஆஹாரவேளைகளை யுக்தப்படி திட்டம் செய்து கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக பால், வெண்ணெய் முதலிய வற்றைக் கொடுத்து வரவேண்டும். மேலும் வேண்டுமானல் மாம்ஸ ரஸம் முதலியது சிறிதளவு கொடுக்கலாம். 6 அவுன்ஸ் பால், 1 முட்டை, 2 அல்லது 3 அவுன்ஸ் இரைச்சி ரஸம் இவற்றை நன்ருகக்குழைத்து தினத்திற்கு 3 வேளைக் கொடுக்கலாம். இதைக் கொடுப்பதற்கு முன் ஒருவித ரப்பர்க்குழாயை வாய்வழியாக இரைப்பையினுள் செலுத்தி அக்குழாயில் ஜலம் சேர்த்து இரைப்பையை ஒரு முறை சுத்தி செய்ய வேண்டும். அதிகமான உணவையும் அக்குழாயின் மூலமாகவே குடலுக்குள் செலுத்தலாம். முட்டையை அதிகம் கொடுக்க வேண்டுமானல் கொஞ்சம் கொஞ்சமாக அதை அதிகப்படுத்த வேண்டும். ஜீர்ணசக்தி மிகக் குறைவாக யிருந்து, ஜ்வரமும் துர்பலமும் அதிகமாய், இருதயமும் அதிவேக மாய் படபடத்து அடித்துக் கொண்டிருக்குமானல் அந்நிலைமையில் அவசியமானல் அரிஷ்டவகைகளில் (Alcohol) ஒன்றைச் சிறிதளவு உபயோகிக்கலாம்.

ஔஷதங்கள்:—இந்த ரோகத்தில் உபயோகிக்கத் தகுந்த ஔஷதச் சரக்குகள் சொற்பமே; அவை: தார்த்தைலம் (Creasote), ஆமணக் கெண்ணெய், ஹைபோபாஸ்பைட்ஸ் என்னும் சில ஔஷத முறைகள், வெள்ளைப் பாஷாணம் இவைகளேயாம்.

VAYU—THE MOST POWERFUL HUMOUR.

தோஷங்களுள் வாயுவே பிரபலமானது.

BY

VAIDYARATNA PARAMESWARA MOSAD,

Ayurvedic Medical Practitioner.

வைத்திய கலாநிதியில் வெளியாகும் வியாஸங்கள் அனைத்தும் மிகவும் அரிதானவை. அவற்றில் வாதபித்த கபங்களைப்பற்றி வரைந்துள்ள வியாஸம் வெகு சிறந்ததென்று மதிக்கக் கூடியதாயிருப்பதுடன், அவ்வியாஸத்தின் இறுதியில் தோஷங்களுள் வாயுவே பிரபலமென்பதற்குக் கூறிய பிரமாணங்களை நான் முற்றிலும் அங்கீகரிக்கிறேன்.

ஆயுர்வேத நூல்களில் எல்லா ரோகங்களுக்குமே வாத பித்த கபங்களென்னும் தோஷங்கள் பொதுக்காரணங்களா யிருக்

கின்றனவென்று மொழியப் பட்டிருக்கிறது. அவற்றுள் வாயுதான் மிகப் பிரபலமானதென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில், வாயுவானது சுதந்திரமாக தானும் வேலை செய்து இதரதோஷங்களையும் தாதுக்களையும் வேலை செய்யத்தூண்டி அவற்றிற்கு வன்மையையும் தருகின்றது; இதரதோஷங்களைவிட வாத தோஷத்தின் கோளாறால் உண்டாகும் வியாதிகளும் எண்ணிக்கையில் அதிகமாயிருக்கின்றன. * எல்லா விதமான விஷயங்களையும் உணர்ந்து புத்திக்கு அறிவிக்கும் சக்தியும் வாயுவினுடையதே. சில ஸமயம் பித்த கபங்களைப் பின் தொடர்ந்து அவற்றின் செயலையும் செய்கின்றது. வாயுவானது பற்பல நிலைமைகளை யடைந்துவந்தால், அப்பொழுது அதனால் உண்டுபண்ணக்கூடாத உபத்திரவம் ஒன்றுமில்லை. பூதங்கள், கிரஹங்கள் முதலியவற்றின் ஆவேசத்தால் உண்டானவை யென்று பலர் அபிப்பிராயப்படும் வியாதிகளும் இவ்வாயுவினாலேயே ஸம்பவிக்கின்றன; ஏனெனில், பூதக்கிரஹாதி ஆவேசத்தால் உண்டானவை யென்று சில ரோகங்களைக் கருதி அவற்றிற்கு மஹாமாந்திரிகர்களைக்கொண்டு அநேகவிதமான பலிகள், ஹோமங்கள், பூஜைகள் முதலானவற்றைச் செய்து பரிஹாரம் பண்ணியும் சிறிதும் குணப்படாமல், இறுதியில் அக்கோளாறுகள் முறைப்படி செய்யப்பட்ட ஸ்நேஹகர்மம் ஸ்வேதகர்மம்† முதலிய வாதரோகத்திற்கேற்ற சிகித்ஸைகளாலேயே சீக்கிரத்தில் ஸ்வஸ்தமாயிருக்கின்றன. இவ்விஷயம் பலவிடங்களில் பிரத்தியக்ஷமாக அநுபவத்திலேயே என்னாலும் பிறராலும் பிரயோக பூர்வமாகவே பார்க்கப்பட்டிருப்பதால் இதில் சிறிதும் ஸந்தேஹத்திற் கிடமில்லையென்று நிச்சயமாய்ச் சொல்லுகிறோம். பிராணவாயு, உதானவாயு, வியானவாயு, அபானவாயு, ஸமானவாயு என்று வாயு ஐந்துவிதமாயிருப்பதால், அது சரீரமெங்கும் நடக்கவேண்டிய காரியங்களுக்கு ஏற்றவாறு ஒவ்வோரிடத்தில் ஒவ்வொருவிதமாய் அமைந்து சரீரத்தை எப்பொழுதும் ஒரு பிரதான அதிகாரியைப் போலிருந்து கொண்டு காத்துவருவதை ஆலோசித்துப் பார்ப்போமாயின் இதர தோஷாதிகளைக் காட்டிலும் வாதத்திற்கே பிராதானியம் கூறவேண்டுமென்று எல்லோரும் ஒரு மனதாய் அங்கீகரிக்க வேண்டிவரும். வாயுவின் சக்தியினாலேயே பிராணிகளெல்லாம் ஜீவதசையில் இருந்து வருகின்றன. நிச்வாஸம் உச்சுவாஸம்(Respiration) என்கிற ச்வாஸ கர்மத்தையும் இதுதான் நிறைவேற்றி வருகிறதென்பது அனைவரும் அறிந்த விஷயமே. (மூச்சு வாங்கும்பொழுதும் விடும்பொழுதும் உட்சென்று வெளிவரும் காற்று ரூபமான வாயுவுக்கும், வாத பித்த கபங்களிற் சேர்ந்த வாயுவென்னும் தாதுவுக்கும் ஸம்பந்தமில்லையென்பதையும், மூச்சுவிடுதல் என்கிற வேலையை நடத்தும் ஒருவித சக்தியே வாதம் என்கிற தோஷமென்பதையும் நீங்கள் மறக்கக்கூடாது. வைத்தியகலாநிதியின் முதல் ஸஞ்சிகையில் வாத பித்த கபங்களைப் பற்றிய வியாஸத்தை மற்றொரு முறைப் பார்க்க.) குடல்களுக்குள் ஒருவிதமான சலனத்தை (Peristaltic contractions) உண்டாக்குவதும், அங்கு பாசகாக்னியெனப்படும் ஜீர்ண சக்தியை உற்பத்தி செய்வதும், அவ்வித சக்தியைக் கொண்டு புஜித்த உணவுகளைப் பக்குவம் செய்

* வாதத்தினால் 80 வியாதிகளும், பித்தத்தினால் 40 வியாதிகளும், கபத்தினால் 20 வியாதிகளும் உண்டாகின்றன. [சார்ங்கதர ஸம்ஹிதை பூர்வகண்டம் 7-வது அத்தியாயம் பார்க்க.]

†ஸ்நேஹகர்மம்—நெய், தைலம், கொழுப்பு முதலானதை சரீரத்தின் வெளிப்புறத்திலும் உபயோகித்து உள்ளுக்குங்கொடுத்து தேஹத்தை எண்ணெய்ப்பசையுள்ளதாகச் செய்யும்வேலை. ஸ்வேதம்—வேர்வுபிடித்தல்.

வதும் இவ்வாயுவே. பிறகு அவ்வுணவுகளிலிருந்து திப்பிகளென்னும் அஸாரமான பதார்த்தங்களை விலக்கிச் சரீரத்தைப் போஷிப்பதற்கு ஏற்ற ஸாரமான ரஸமென்னும் பால்போன்ற திரவத்தைப் பக்குவம் செய்து, இதைக்கொண்டு அந்த தாதுக்களைப் போஷிக்கச்செய்வதும், அந்ததாதுக்கள் இடைவிடாமல் உண்டாக்கும் கழிவுப்பொருட்களை அவற்றினின்றும் விலக்கி மூத்திரமாக்கம் முதலியவற்றால் வெளிப்படுத்தும் வேலையும் இதனுடையதே. கர்ப்பம் கருப்பையில் வளருவதும், கருப்பையிலிருந்து அதைத்தகுந்தகாலத்தில் வெளிப்படுத்துவதும் வாயுவினுடைய வேலையேயாகும். வாயுவானது சரீரத்தில் எங்கும் வியாபித்திருந்து, சரீரத்தில் தெரிந்தும் தெரியாமலும் நடந்தேறும் ஸகலவிதமான செயல்களையும் எல்லா உணர்ச்சிகளையும் தனது வசத்தில் வைத்துக்கொண்டு சக்கிரத்தைப் போல் ஒழுங்காக அவ்விஷயங்களையெல்லாம் நடத்தி வரும்படி ஈசன் ஏற்பாடு செய்திராமற் போனால், ஆஹாரம் உண்பதும், அவ்வுணவின் ஸாரம் தேஹ தாதுக்களிற் பரவி அவற்றைப் போஷிப்பதும் எவ்வாறு நடந்தேறும்! தேஹத்திற்கு வன்மையும் சக்தியுந்தான் எங்ஙனம் ஏற்படக் கூடும்! நாடிமண்டலமெனப்படும் நரம்பு மண்டலத்தை ஆச்ரயித்து இவ்வாயுவானது சரீரமெங்கும் தனது வேலையை நடத்திவருகிறதென்றே மேற்கூறிய முகாந்தரங்களைக் கொண்டு அனைவரும் அறியாமல், நரம்புமண்டலத்தின் வேலை இத்தகையதென்று இக்காலத்திய சரீரதத்துவமறிந்தவருக்குத் தனியாகக் கூறவேண்டிய அவசியமில்லை. ஆகவே எவ்விதம் ஆராய்ச்சி செய்து கவனித்தபோதிலும் சரீரத்தில் மற்றத் தோஷங்களையும் தாதுக்களையும் தனது ஆட்சியின்கீழ் வைத்துக் கொண்டு ஸகல காரியங்களையும் சுதந்திரமாக நடத்தும் வாயுவே அவற்றுள் மிகப் பிரதானமானதென்று நமது வைத்தியர்கள் கூறும் விஷயமானது வாஸ்தவமென்றே நிச்சயிக்க வேண்டும்.

SOME CUTANEOUS DISEASES CURED BY SUN LIGHT.

சில சர்ம வியாதிகள் சூரியகிரணத்தால் நிவ்ருத்திக்கப்பட்டன.

BY

Mr. M. S. AIYANGAR,
Medical Practitioner.

மிஸ்டர் ஸீபை யென்பவர், சூரிய கிரணங்களை ஒரு மையத்தில் சேர்த்து (in a focus), அக்கிரணத் திரட்சியை சர்மத்தின் வியாதி கொண்ட பாகத்தில் படியச் செய்வதால், ஔஷதப் பிரயோகங்களாலுண்டாகும் செலவுகள் சிறிதுமில்லாமல் வெகு எளிதில் சில சர்மவியாதிகளைப் போக்கலாமென்று நியூயார்க் மெடிகல் ஜர்னலில் ஒரு ஸமயம் எழுதினார். விசேஷமாக முகத்திலும், மூக்கின் மீதும் உண்டாகிற வெகு காலமூடான சொரி சிரங்குகளையும், அவற்றின் காய்ப்புகளையும், மற்றும் களிம்பு தைலம் அல்லது சூர்ணம் முதலியவற்றை உபயோகித்தும் தீராத சில தோல்வியாதிகளையும் இவ்விதம் சூரிய கிரணப் பிரயோகத்தினால் குணப்படுத்தி அநேக வருஷ அநுபவத்தின்பேரில் அவ்விதம் தீர்மானித்ததாகவும், இதனால் பலர் நிரந்தரமாகவே தோல்வியாதியினின்றும் விலகி ஸௌக்கியமாயிருப்பதைப் பார்க்கத் தான் மிகக் களிப்புறுவதாகவும் கூறுகிறார்.

சர்ம வியாதிகளில் சூரிய கிரணங்களை அவர் பிரயோகித்த முறை யாதெனில்:—தகுந்த கண்ணாடி முதலியவற்றின் மூலமாய் சூரிய கிரணங்களை ஓரிடத்தில் திரட்டி, அக்கிரணத் திரட்சியை வியாதி கொண்ட பாகத்தில் பத்து அல்லது பதினைந்து நிமிஷம் வரையில் நன்றாகப் படும்படி செய்யவேண்டும். பிறகு

களின்மேல் கிரணம் படுமிடத்தில் சர்மத்தின் சிதைந்துபோன செதில் சிறிதளவு பிரிவது போல் தோற்றும்போது அவ்விடத்தில் எரித்தலும் உண்டாவதாகப் பிணியாளி கூறுவாராயின், உடனே கிரணங்கள் திரட்சியாயிராமல் விரிவாயாகும்படி அதற்கென்று உபயோகப் படுத்தப்படும் கருவியை உயரத் தூக்க வேண்டும்; அப்பொழுது வியாதி கொண்ட விடத்தில் மையமாகவிழுந்த கிரணங்கள் நாலுபுறமும் சிறிது விரிவதால் அவ்விடத்தில் சுற்றிலும் வெயில் பரவும். ஆகவே விரணத்தின் மேலே மாத்திரம் ஒருமிக்கக் கிரணங்கள் விழாமல் சுற்றிலும் விழுவதால் எரித்தல் இல்லாமல், விரணதிற்குச் சுற்றிலுமுள்ள பாகமும் சுத்தமாகும். மறுபடியும் சில நிமிஷங்கள் கழித்து முன்போலவே கிரணங்களை அதே யிடத்தில் விழும்படி எரித்த லுண்டாகும் வரையில் பிடிக்கவேண்டும். இவ்விதம் இரண்டு மூன்று தடவை செய்தபிறகு விரணத்தின் மேலுள்ள செதிள்கள் சிறிது கறுநிறங்கொள்ளும்; பிறகு இரண்டொரு நாட்களுக்குள் அச்செதிள் கிரமமாகப் பிரிந்து வரும். முற்கூறிய விதமாக தினந்தோறும் இவ்வித சிகித்ஸையைச் செய்யவேண்டும்; அவ்விதம் செய்தால் தான் விரணத்தின்மேலுள்ள செதிள்கள் சீக்கிரத்தில் சர்மத்திலிருந்து இரத்தம் வராமலும் வலியைக்கொடுக்காமலும் எளிதில் பிரிந்து வரும். அவ்விதம் பிரியும் வரையில் ஸாதாரணமாக இச்சிகித்ஸையைச் செய்து வந்து, அப்பால் இறுதியில் கிரணங்களை முன்னிலும் அதிகமாகத்திரட்டி தீக்ஷ்ணமாக அவ்விடத்தில் விழும்படியாகச் செய்ய வேண்டும். அப்பொழுது அதிக எரித்தலை ஸஹிப்பதற்காக அவ்விரணத்தின்மீது சிறிது கொக்கேன் என்கிற மருந்தைத் தடவலாம்; பிறகு சில நிமிஷங்களளவும் நன்கு தீக்ஷ்ணமாக கிரணங்களைத் திரட்டி அவ்விடத்திற் படியச் செய்தால், உட்புறத்தில் வியாதிகொண்ட பாகமும் நன்கு சுத்தி செய்யப்படும்; இவ்விதம் 15 நிமிஷங்கள் செய்தால், சர்மவியாதிக்குக் காரணமான ஸூக்ஷ்ம ஜீவன்கள் அழிவதுமல்லாமல், அவ்விடத்தில் வியாதி கொண்டு கோளாறடைந்த சர்மத்தின் ஜாலங்களும் (cells) அவ்விடத்தை விட்டு விலக்கப்படும். ஸாதாரண சர்ம வியாதிகளில் நாலைந்து நாள் சிகித்ஸையே போதுமானது. தத்ரு (படை), வாதரக்தம் என்கிற ஒருவிதமான தோல்வியாதி முதலிய வற்றில் இரண்டு மூன்று தினங்களுக்கு ஒரு முறை சூரியகிரணங்களைத் திரட்டி மேலே சிறிது பிரிந்துள்ள செதில் மூலமாய்ச் சர்மத்திற்குள் விட்டுவர வேண்டும்; அவ்விதம் முறைப்படி செய்து வந்தால் மூன்று முதல் ஆறு வாரத்திற்குள் அவ்விடத்திலுள்ள வியாதி நன்றாக ஸ்வஸ்தமாய் விடும். சிலருக்கு இதனால் மேலுள்ள செதிளுடன், அதற்கடியில் வியாதிகொண்டு சர்மத்தின் மிருதுவான பாகமும் மெல்ல மெல்ல முன்போலவே செதில் செதிளாகப் பிரிந்து உதிர்ந்துவிடும். வியாதி கொண்ட சர்மத்தின் மேல்வரிசைகளுக்கு அடியிலுள்ள கடைசி பாகத்தில் ஒரு விதமான காய்ப்பு அரிதாக உண்டாகலாம். ஆனால் அது காலக்கிரமத்தில் தானாகவே மறைந்தும் விடும். எட்டு முதல் பதினைந்து முறைக்குள்ளேயே இவ்வித சிகித்ஸையினால் சிலருக்குப் பற்றறவே வியாதி ஒழிந்து விட்டதை அநுபவத்தில் பார்த்திருப்பதாக மிஸ்டர் ஸீபை யென்பவர் சொல்லியிருக்கிறார். விரணங்களிலிருந்து கசியும் தோஷங்களிலுள்ள ஈரத்தைப் போக்குவதற்காக சிகித்ஸை செய்து வரும் நாட்களிலும், ஸாதாரணமாக போரிக் அம்லம் (Boric acid) முதலிய ஏதேனும் பொடிகளை (dusting powders) அவ்விரணத்தின்மேல் அவசியமா

னுல் தானிவரலாம். இதே விஷயம் "யூரோலா ஜிக் அண்ட் க்யுடேனியஸ் ரிவ்யூ" என்கிற பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

HISTORY OF AYURVEDA.

ஆயுர்வேத சரிதம்.

By

Mr. T. D. RAJAVAJAPEYAR,

Sub-Assistant Surgeon.

(9-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி.)

மேற் சொல்லியவரே எலும்பு விஷயமா யெழுதியிருக்கும் தன்னுடைய நூலில் (Hoerule's osteology) "தந்த்ரகல்பத்துக்கு வெகுநாளைக்கு முன் வைத்தியரென்னும் பெயருடன் வைத்தியத்தை சூன்ய வித்தையைப் போல் (Witchcraft) அனுஷ்டித்து வந்ததாகவும், தாங்கள் அப்படிச் செப்வது மனிதருக்கு ஸாத்தியமல்லாத தென்றும் ஈச்வரனுல் நடந்தேறிவருகிறதென்றும் சொன்னுர்கள்" என்று எழுதியிருக்கிறுர்.

நாம் இதுவரையில் ஆயுர்வேதம் தொடர்ந்து வந்தவழியின் வரலாறு, காலநிர்ணயம் முதலியவற்றைச் சொன்னேம். இப்பொழுது அது விருத்தியடைந்து வந்ததென்பதற்கு அத்தாட்சியா சில விஷயங்களைக் கூறுவோம்:—

வைத்தியசாஸ்திரத்துக்குக் கொஞ்சமேனும் ஸம்பந்தமில்லாத வேதங்களுள் ஆதியாகிய ருக்வேதத்தின் ஐதரேய பிராம்மணத்தில் ஸோமலதையைப் (ஆட்லாங்கொடியை) புளிக்கவைக்காமல் பக்குவம் (wine) செய்யும் விதத்தைக் கண்டுபிடித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல் அவ்வளவு அநாதி காலத்தவருக்கே சில வஸ்துக்களைப் புளிக்க வைக்கும் முறையும், புளிக்காமல் தடுக்கும் விதமும் தெரிந்திருந்ததென்பது அவர்களின் பதார்த்த தத்துவஞானத்தைக் காட்டுகிறது.

மேலும் அவர்களுக்கு ஸோமரஸத்தின் குணமும், அதனுபயோகமும் நன்ருய்த் தெரிந்திருந்தது. தேவர்களுக்கு இறப்பில்லாமல் செய்ததற்குக் காரணம் ஸோமமென்றும், அதற்கு தேகத்தைப் பரவசப்படுத்தும்படியான சக்தியுண்டென்றும், அது எல்லா வியாதிகளையும் குணப்படுத்தக் கூடியதென்றும் நிச்சயித்திருந்தார்கள்.

மருந்து செய்யச் சரக்குகள் சேகரித்தல்.

அக்காலங்களில் மருந்துக்குப் பூண்டுகள் வேண்டுமானுல் தற்காலத்தில் நாம் செய்வது போல இஷ்டப்பட்டபோது நினைத்தபடி பச்சிலை பரித்தல், வேர் அறுத்துவருதல் முதலியவை செய்கிறதில்லை. ஆனுல் அவர்கள் எது வேண்டுமானுலும் அந்தந்தப் பச்சிலைகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிற அதிஷ்டான தேவதையைப் பிரார்த்தித்து பூஜை முதலானதை செய்து, நாள், நக்ஷத்திரம், யோகம், கரணம் முதலியவைகள் சரியாக இசைந்திருக்கிறதென த் தெரிந்துகொண்டு, பிறகுதான் அக்காரியம் செய்யத் துணிவார்கள். இவைகளைக் கேட்கும்போது அவ்வநாதி காலத்தில் எம்மாதிரியான வைத்தியம் செய்தார்கள், எவ்வித வியாதிகளைக் குணப்படுத்திஞர்கள் என்று நாமறிந்துகொள்ள ஆவலுண்டாகிறது. இதைப் பற்றி விவரமாக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் இங்கு ஒன்று அல்லது இரண்டு உதாஹரணங்களுக்கு மேல் எடுத்துக் கூற இடமில்லை. ருக் வேதத்தில் (1-117-13) ஒரு சிறு கதை சொல்லப்பட்டிருக்கிறது.

1. "ஸார்பாதி" என்று ஓர் அரசனிருந்தான். அவனுக்கு 'ஸுகன்யை' என்று ஒரு பெண் உண்டு. சில காரணங்களால் ச்யவனர் என்னும் இருஷி இந்த ஸுகன்யை விவாஹம் செய்து கொள்ளும்படி நேரிட்டது. கலியாணமாகுங் காலத்திலேயே இருஷி வயோதிகர். கொஞ்ச

நாளைக்குப்பிறகு அவர் மறுபடி காட்டுக்குத் தவம் செய்யப்புறப்பட்டார். ஸுகன்யை மஹாபதிவ்ரதை. இருஷி புறப்படும் காலத்தில் அவர் தன்னுலியன்ற மட்டில் தடுத்தும் அவள் ஒரே பிடிவாதமாக அவர்கூடப் போகத்தான் போவேனென்று போனாள். காட்டுக்குப்போன சிலகாலங்களுக்குப் பிறகு இருஷி விருத்தாப்பியம் முற்றி தேஹத்தில் பலமில்லையே, தனக்கு ஸந்ததியு மேற்படவில்லையே யென மனத்துயரம் கொண்டு இயங்கி ஈச்வரனை எப்பொழுதும் நினைத்து நினைத்து பெருமூச்சு விடுவார். மஹா ஸாத்வியான ஸுகன்யையைப் பார்த்தவுடன் மனது கொஞ்சம் தைரியமடையும். இவர் இம்மாதிரியாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் அச்வினீ குமாரர்கள் நேரில் வந்து, அவருக்கு ஓர் இரஸாயனம் செய்து கொடுத்தார்கள். இம்மருந்தைச் சாப்பிட்ட பிறகு அவருடைய விருத்தாப்பியம் போய் இளம் பருவம் திரும்பி, வெகுகாலம் ஸந்தோஷமாகவும், ஸௌக்கியமாகவும் கவலையற்றுத் தவம் செய்து கொண்டிருந்தார்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

2. இந்திரனுக்கு ஒரு காலத்தில் பார்ச்வ வாயு வந்திருந்ததாகவும், அதை அச்வினீ தேவர்கள் குணப்படுத்தியதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

அக்காலத்தில்கூட அங்கச் சேதங்கள் (amputations of legs, etc.) செய்யும்படி நேர்ந்தால் இரும்புக்கால்கள் செய்து காலுக்குப் பதிலாய் உபயோகித்துவந்தார்களென்றும், கண்ணைப் பிடுங்கும்படி நேரிட்டதில், கண்ணாடிக் கண்கள்செய்து உபயோகித்ததாகவும் தெரியவருகிறது. இது மட்டுமல்ல, ஐதரேய பிராஹ்மணத்தைப் பார்த்தால் இன்னும் அநேக விஷயங்கள் புலப்படுகின்றன. சந்திரனுக்கு க்ஷயரோகம் (Consumption) வந்து, அச்வினீ தேவர்கள் குணப்படுத்தினார்களாம், பூஷனுக்குப் (ஸூர்யன்) பற்கள் சிதறுண்டு, பிறகு கட்டப்பட்டனவாம். அவர்களுக்கு சாரீர சாஸ்திரமும் (Anatomy), உடற்கூறு சாஸ்திரமும் (Physiology), கர்ப்போத்பத்தி சாஸ்திரமும் (Embryology) நன்றாகத் தெரியுமென்று விளங்குகிறது.

அதர்வண வேதத்தில் திரவ்யகுணமும் (Materia medica), உலோகங்களின் குணம் முதலியவைகளும் (Properties & uses of metals) நன்றாகச்சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள் தங்கம் ஆயுள் விருத்திசெய்யுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. கூந்தல் செழுமையாக வளருவதற்கேற்ற மருந்து அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

பாண்டவர் காலமும் வைத்தியமும்.

பாண்டு மஹாராஜன் அரசாட்சி புரிந்து வந்த காலத்தில் வைத்தியம் சீர்திருத்தமாய்க் கொண்டிருந்தது. பிறகு துர்யோதனாதிகள் ராஜ்ய பரிபாலனம் செய்து வருகையில் அவர்கள் ராஜ்யதந்த்ர நிபுணர்களாகையால், அவர்கள் அநேக வைத்தியர்களுக்குப் பரிசுகள்கொடுத்து அவர்களை ராஜ்யத்தில் வைத்துக்கொண்டிருந்ததுமன்றி, யுத்தத்துக்குப் போகும் காலங்களில் ஸேனைகளை இரக்ஷிப்பதற்காகவும் வைத்தியர்களை (Military Surgeons) அமர்த்தினார்கள். மஹாபாரதத்தில் பீஷ்ம பர்வத்தைப் படித்துப் பார்த்தால் இதனுண்மை நன்கு விளங்கும். எப்படியென்றால், துர்யோதனன் தேஹம் முழுமையும் அஸ்திரங்களால் குத்துண்டு ஸஹிக்க முடியாத அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கையில், அவ்வைத்தியர் அவனை மருந்திட்ட ஜலத்தில் உட்காரவைத்து நோயில்லாமல் செய்து, அஸ்திரங்களைப் பிடுங்கி, புண்களை ஆற்றினார்களென்பதே போதுமான அத்தாட்சியாகும். பௌத்தக்கிரந்தங்களில் ரணவைத்தி

…த்தைக் (Surgery) கண்டனம்செய்த உப…கள், அநேகவிதமான பூச்சுகள், மைகள் முதலி…ற்றப் பெரிய சிரங்குகள் முதலிய …ற்றிற்கு உபயோகித்து வந்ததாகச் சொல்லப் …ட்டிருக்கிறது.

ஆயுர்வேதம் இருந்ததும் அழிந்ததும்.

நாம் ஆயுர்வேதம் ஆதிகாலத்தில் எப்படி இருந்ததென்பதைப் பற்றிச் சொல்லியிருக் …றோம். இப்பொழுது நாம் அது எப்படி …ிருத்தியடைந்து வந்ததென்பதையும், பிறகு …து எப்படி உபயோகத்திலில்லாமல் அவ் …வைத்திய சாஸ்திரமே வேரற்றுப் போயிற் …றென்பதையும் சற்று விளக்குவோம்.

சரகர், ஸுச்ருதர் முதலியவர்களிருந்த கா …லத்தில் சாஸ்திரமானது முன்னுக்கு வந்து …கொண்டிருந்தது. அக்காலங்களில் வைத்தி …யம் வாசிக்க முயலுபவர், குறைந்தது 'த்வி …சாஸ்த்ரபாரங்கதா' என்று இரண்டுசாஸ்த்ரம் …ன்றாய்ப் படித்தவர்களாக இருந்தார்கள். …வற்றுள் தத்துவசாஸ்திரம் முக்கியமாயிருந் …தது. இதுமட்டுமல்ல. அவர்கள் உபயோகிக் …ும் கத்தி முதலிய ஆயுதங்களின் நாணயம் …ுதலிய குணங்களைச் சற்றறிவதைத் தவிர …வைகளைச் செய்யவும் கற்றிருந்தனர். அக்கா …லங்களில்கூட அனுபவஞானம் உண்டாவதற் …காகப் பிணத்தை அறுத்து உட்புறத்து தத்து …வங்களைத் தெரிந்துகொண்டு வந்தார்கள். …துதற்கு அநேக ஸாதனங்கள் அவர்களுக்கு இருந்தன.

அவ்…ஆதிகாலங்களில் கூட யுத்தத்துக்குப் …போகும் காலங்களில் ஸைன்ய ரக்ஷணையின் …பொருட்டு வைத்தியரை அழைத்துப் போகும் …வழக்கத்தை அனுஷ்டித்து வந்தார்களெனக் …கூறினோம். காலம் செல்லச் செல்ல வர்ணாச் …ரமபேதம் அதிகமாக ஏற்பட்டது. இதன் … காலத்தில் பிணத்தைத் தொடுவது அசுசி யென்றும், மீறிச் சவந்தொட்டவனுக்கு அநேக விதமான பிராயச்சித்தங்கள் நியமித்ததைத் தவிர ஜாதிப்பிரஷ்டமும் செய்யத் தொடங்கினார்கள். இதில் முதலில் ஜாதிபிரஷ்டம் செய்யப்பட்டவர்கள் அச்விநீகுமாரர்கள். பிறகு அவர்களுடைய அத்யாச்சர்யமான வைத்தியச் செயல்களைக் கொண்டாடி மறுபடி ஜாதியில் சேர்த்துக்கொண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிராமணர்கள்தான் வைத்தியத்தில் சிறந்தவர்களாம். ஆனால், வைத்தியர்களுடன் பிறர் வெகுகாலம் வரையில் பங்க்திபோஜனங் கூடச் செய்கிறதில்லை. இச்சட்டங்கள் நாளாக வாக அதிக கஷ்டமாயின. உடனே புத்தியிற் சிறந்த பிராமணர்கள் வைத்தியத்தைக் கைவிட்டு வேதசாஸ்த்ராத்யயனத்துக்கு ஆரம்பித்தார்கள். தவிர அனுபவ முறைப்படி அப்யஸிக்கவேண்டிய சல்யதந்த்ரத்துக்கு (Practical surgery.) ஸாதனமாக உபயோகித்துவந்த பிணங்களும் கிடைக்காமற் போயின. ஏனெனில்சாஸ்திரவிதிப்படி 2,3 வயதுக்கு மேற்பட்டு இறந்தவர்களின் சரீரத்தை தஹநம் செய்வது வழக்கமாக அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்தபடியால், அவர்களுக்கு அனுபவஞானத்துக்கு ஸாதனமாக முதிர்ந்த சரீரம் கிடைக்காமற் போயிற்று. ஆகவே இந்து தேசம் முழுதும் வைத்தியர்களுக்கு ஆதரவு கொடுத்து வந்த பௌத்தர்களும் சல்ய தந்த்ரத்தைக் கண்டனம் செய்துவிட்டார்கள். இதனால் சல்ய தந்த்ரமானது அன்று முதல் அனுபவத்தில் வராமலே நின்றுவிட்டது.

நாளாகவாக நமது வைத்தியத்தின் தாது ஒடுங்கிவர ஆரம்பித்துவிட்டது. ஆயினும் இரஸாயன சாஸ்திரமும், திரவ்யகுண சாஸ்திரமும் முன்னுக்கு வந்துகொண்டேயிருந்தன. இவை இப்படியிருந்தும் சிகித்ஸா ஸ்தானத்தை (Therapeutics) மட்டும் தங்கள் முன்னோர்கள் சொல்லியபடி அனுஷ்டித்து வந்தார்

கள். நிரூபண சக்தியும் (powers of observation) குறைந்துகொண்டு வந்தது. சல்ய தந்த்ரத்தை முழுதும் மறந்து, பெரிய சிரங்கு (abscess,etc.) முதல் கத்தியைக் கையிலெடாமல் மேற் பூச்சுகளாலும், அஞ்ஜனங்களாலும் உடையும்படி செய்ய ஸாதனங்கள் தேடிக்கொண்டார்கள்.

சாஸ்திரங்களானாலும் சரி, கலைகளானாலும் சரி முன்னுக்கு வரவேண்டுமானால் அந்தந்தக் காலத்தரசர்கள் வித்துவான்களுக்கு பரிசு முதலியவைகளைக் கொடுத்து ஸந்தோஷப்படுத்தி ஆதரவு புரியவேண்டியது மெத்தவும் அவசியம். தவறினால் வித்துவான்களுக்கு மனக்குறை யேற்படுவதைத் தவிற சிறுவர்களுக்கும் படிக்கத் துணிவு கொடாது. ஆங்கிலவரகவி யென்று சொல்லக்கூடிய ஷெல்லி (Shelly) யென்பவர் இளம்பிராயத்தி லிறக்கக் காரணமென்ன? இது நிற்க, அரசர்களாயினும், ஜனங்களாயினும் முன் வந்து உதவி செய்யாவிடினும் "நரி வலமாவது நலமா, இடமாவது நலமாவென்பதற்கு, மேலே விழுந்து பிடுங்காமற் போவது நலம்" என்பதுபோல் கெடுதல் செய்யாமலிருந்தால் அதுவே ஒரு பெரிய பரிசும், பேருதவியுமாக நினைக்கலாம். இதைச் சொல்லக் காரணமென்ன வெனின், இந்தியாவில் முகம்மதியர் (Musalman) அரசாட்சி செய்யத் துடங்கியது முதல் சாஸ்திரமானது க்ஷீணதசையை அடைய ஆரம்பித்தது. கி. பி. 1202-ல் மகம்மது பின் ஸிம் என்பவர் ராஜ்யபாரம் வஹித்து வந்தார். அவர்காலம் வரையில் ஹிந்துக்களுக்குப் பெரிய பெரிய கோயில்களிருந்தன. முற்காலங்களில் பெரிய கோயில்களும் மடங்களும் தான் ஸாஸ்வதிமஹால் அல்லது புஸ்தகசாலைகளாயிருந்தன (Public Libraries). பௌத்தக்கோயில்களுள் மெத்தவும் பெரியதாயிருந்த உதந்தபுரிவிஹாரத்தில் (Odantapuri Vihara) இந்தியாது வெகு சிரேஷ்டமான அநேக ஆதிகாலத்து அபூர்வ கிரந்தங்களிருந்தன. ஆ! கஷ்டம்! மேலே சொல்லப்பட்ட கொடுமை யரசரின் ஸேனாதிபதியாயிருந்த பாக்டியார் கில்ஜி (Bactyar Khilji) என்பவர் அக்கோயிலை தஹனம்செய்தார். அங்கிருந்தக் கிரந்தங்கள் அக்கினிக்கு இறையான பின்னர் வேறு அவ்வநாதிக் கிரந்தங்கள் அகப்படாமலே போயின. காலம் செல்லச் செல்ல "பழையனமாறி புதியவைக் கிடங்கொடுக்க வாரம்பித்தது" (The old order Changeth yielding place to new—Tennyson) என்பது போல மஹாராஷ்டிரர்கள் ராஜ்யபாரம் செய்ய வாரம்பித்தார்கள். அவர்களுக்கு ஆதிகாலத்து வழக்கங்களிலும் சாஸ்திரங்களிலும் நம்பிக்கையும் பிரியமும் இருந்தமையால், அவர்கள் ஆதிகாலம் முதல் அநுபவத்திலிருந்து நீரில் அமுங்கியதுபோலிருந்த சாஸ்திரங்களைப் பிரசாரம் செய்ய வேண்டு மென்னும் எண்ணத்துடன் வித்துவான்களுக்குப் பேருதவி செய்து, காற்றில் காற்றுடி யேற்றுவதுபோல நம் பழைய சாஸ்த்ரானுபவங்களை மெல்ல மெல்ல முன்னுக்குக் கொண்டுவந்தார்கள். இம்மாதிரி கொஞ்சகாலம் கழிந்தபிறகு, ஆங்கில வைத்தியமானது இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டு, அது ராஜாங்கத்தாரால் ஆதரவு பெறவே ஆயுர்வேதம் தலைகாட்ட முடியாமல் போயிற்று. இதன் விவரம் நாம் இங்கு கூறுவது உசிதமல்ல. எப்படியாயினும் ஆங்கிலர்களும்,

படித்த இந்தியர்களும் ஆயுர்வேத மறிய முயன்று பற்பல பாஷைகளில் இச்சாஸ்திரத்தை மொழிபெயர்க்க வாரம்பித்தார்கள். ஸர். W. ஜோன்ஸ் (Sir. W. Jones), வில்ஸன் (Wilson) வயிஸ் (Wise), டாக்டர் வாரிங் (Dr. Waring), ஆர். சி. டட். (R. C Dutt) முதலியவர்கள் இந்த சாஸ்திர விஷயமாக ரொம்ப உழைத்திருக்கிறார்கள்.

காஸ்டலானி, சாமர்ஸ் (Castellani & Chalmers) இருவரும் உஷ்ணதேசத்து வைத்திய சாஸ்திரம் (Tropical medicine) எழுதியிருக்கிறார்கள். இப்புத்தகத்தின் ஆரம்பத்தில் வைத்தியம் வந்த வழியும், உலகத்தில் பரவிய விதமும், இந்தியாவில் அது ஆதிகாலங்களிலிருந்து ஆங்கிலர் வந்து தற்காலம் வரையிலுள்ள ஸ்திதியும் வெகு அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அக்காலங்களில் கூட அம்மை குத்துவது இந்தியாவில் ஸஹஜமென்றும், அப்படிக் குத்துவது கோடைகாலத்து ஆரம்பத்தில் வழக்கமென்றும், வியாதிகளை 'குணமாகக் கூடியவை, குணமாகாதவை' என இருவகையாகப் பிரித்திருந்தார்களென்றும், வியாதியைக் கண்டுபிடிக்க நாடி, கண், தோலின் வர்ணம், முகத்தின் குறிகள், மலஜலங்களின் ஸ்திதி, ஸ்வரம் இவை முதலியவற்றைக் கொண்டு நிதானித்தார்களென்றும், தற்காலத்தில் இந்தியர் மேற்றேசத்தவரை வைத்தியத்துக்கு எதிர் பார்க்கிறார்களென்றும், ஆனால் அவர்களுக்கு அவ்வைத்தியத்தில் அதிகமான நம்பிக்கையில்லையென்றும் சொல்லுகிறார்கள்.

ஆயுர்வேதம் வாசிக்கும் முறைகளைப் பற்றிய விஷயங்களில் முக்கியமாக கவனிக்கவேண்டியவை சில இருக்கின்றன.

(தொடரும்.)

AN ILLUSTRATION OF CASE TREATED UNDER THE NEW HYGIENIC PRINCIPLES.

புதிய ஸுகாதார முறைப்படி செய்த சிகித்ஸையில் ஒரு திருஷ்டாந்தம்.

BY
Mr. P. B. RANGACHARYAR
Conjeeveram Ayurvedic Dispensary.

புதிய ஸுகாதார முறைப்படி ஸகல வியாதிகளையும் குணப்படுத்தலாமென்பதை யுணர்ந்து அவ்விதமே அநேகருக்கு நான் சிகித்ஸை செய்து வருகிறேன். அவ்வித கேஸுகளில் அடியில் கூறப்படுவதும் ஒன்று.

இவ்வருஷம் ஏப்ரல்மீ 17-உ இவ்வூரில் (காஞ்சீபுரம்) ஸ்ரீமான் மே. தி. மா. நரஸிம்மாசாரியர் என்கிற தமிழ்ப்பண்டிதருக்கு ஜ்வரமும், பக்கச்சூலையும் கண்டு அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தார். இரவில் நித்திரை கிடையாது. மூச்சு விடவும் முடியாமல் மிகவும் கஷ்டமநுபவித்தார். இப்படியிருக்கையில் மறுநாள் இராத்திரி என்னை வரவழைத்தார். அப்பொழுது, அவர் நாலைந்து தினங்களுக்கு முன் தவறி கீழே விழுந்ததாகவும், எலும்பு ஏதேனும் ஒடிந்திருக்குமோவென்று ஸந்தேஹிப்பதாகவும், ஆகையினாலேயே இவ்விதம் மஹா ஸங்கடம் அநுபவிக்கவேண்டி நேரிட்டதாகத் தோற்றுகிறதென்றும் சொன்னார். அப்பால் தேஹத்தைப் பரிசோதனை செய்து பார்த்ததில் எலும்புகள் ஒன்றும் சிதைவுறவில்லையென்றும், மலபந்தம் விசேஷித்திருப்பதைக் காரணமாகக்கொண்டு இவ்வித பக்கச்சூலை ஸம்பவித்ததுடன் அதனாலேயே ஜ்வரமும் உண்டாயிற்றென்றும் நான் ஒருவாறு தீர்மானம் செய்துகொண்டு, அவ்விஷயத்தை அப்பிணியாளியினிடமும் தெரிவித்தேன். அவர் என்னிடம் சிகித்ஸை செய்துகொள்ள ஒப்புக்கொண்.

டார். ஆனல் சிகித்ஸைக்காக ஆயுர்வேத வைத்தியசாலைக்கு அப்பொழுது வர அவருக்குச் சக்தியில்லை. அது கண்டு அவருடைய வேண்டுகோளின்படி அவர் இருக்குமிடத்திலேயே சிகித்ஸை செய்ய ஆரம்பித்தேன். நான் இவருக்கு சிகித்ஸை செய்ய ஆரம்பிக்கையில் இரவு 9-மணி.

நான் செய்த சிகித்ஸாகிரமம் என்னவென்ருல்:—புதிதாக நான் ஏற்படுத்தியிருக்கிற நீராவிஸ்நாந யந்திரத்தினல் பாஷ்ப ஸ்நாநம் * செய்வித்தேன். இது முடிந்தவுடனே இப்புதிய சிகித்ஸாகிரமத்தை யநுஸரித்து குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யவேண்டுமென்று சொன்னேன். அவர் அதற்குப் பயந்தார். எப்பொழுதும் பெரும்பாலும் வெந்நீரிலேயே ஸ்நாநம் செய்து வெந்நீரையே பானம் பண்ணுகிற வழக்கமுடையவரை ஜ்வரத்தில் இரவு 10-மணிக்குக் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யச் சொன்னல் அவருக்குமட்டுமேயல்ல மற்றும் பெரும்பாலோருக்கும் அச்சமுண்டாவது இயல்பே; ஆகவே சீதஜலஸ்நானம் செய்ய அவர் மறுத்தார். குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வதால் ஒருவித தீங்கும் நேரிடாதென்று நான் உறுதிமொழிகூறியதுடன், சீதஜலத்தை யுபயோகிக்காததோடு தீக்ஷ்ணமான உத்தீபந வஸ்துக்களை (Stimulants) உபயோகித்து வருவதாலேயே இவ்வித கோளாறுகள் சரீரத்திற்கு நேரிடுகின்றனவென்றும் சொல்லி அவருக்குக் குளிர்ந்த ஜலத்தினிடமுள்ள பயத்தைப்போக்கி அவரை மறுபடியும் ஒருவாறு இச்சிகித்ஸைக்கு வசப்படும்படி செய்தேன். பெரு முயற்சி செய்து குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்துவைத்தேன். பிறகு உஷ்ணமான நீராவியைக்கொண்டு மறுபடியும் பாஷ்பஸ்நானம் செய்யச்சொன்னே[ன்.] அவ்விதம் செய்து முடிந்த பிறகு உடனே சி[...] து நேரத்திற்குள்ளேயே படுக்கையிற் கிடந்[த] மனுஷியன் எளிதில் எழுந்துட்காரும்படி[...]யிற்று. அப்பொழுதே அவருக்கு இருந்[த] ஸந்தோஷம் இவ்வளவென்று சொல்லமுடி[யா]து. "இது விந்தையன்ரே! இதன்ரே சிகித்ஸை! இவ்வரிய விஷயத்தை உலகத்த[...]றிய மொழிந்திட எனது நா துடிதுடிக்[கி]றது!" என்று கூறி மிகு மகிழ்ச்சியை வெ[ளி]யிட்டார். பிறகு மலக்குடல்களில் வஸ்திமூ[ல]மாய் (Enema) ஜலத்தைச் செலுத்தி அ[...] வுள்ளவயவங்களையும் சுத்தம் செய்து குளி[ர்...] செய்தேன். பசியுண்டாகும் வரையில் யாதொ[...]ன்றும் புஜிக்கக்கூடா தென்றும், தாஹமெடு[த்]தால் குளிர்ந்த ஜலத்தையே பானம்பண்ணலா[...]மென்றும், இதற்குள்ளேயே சீக்கிரத்தில் உமக்கு நித்திரைவருமென்றும் சொன்னேன். நான் ஒரு ஔஷதமும் கொடுக்கவில்லை. சில நாட்களாய் நித்திரையில்லாமலே வருந்துப[வ]ரான அவருக்கு உடனே அயர்ந்து நல்ல நித்திரை வந்தது. இரவெல்லாம் தடையில்லாம[ல்] காலை 7 மணிவரையில் தூங்கினர். காலையில் ஜ்வரமும் நிவ்ருத்தியாயிருந்தது. சரீரநோவு[ம்] குறைந்துவிட்டது. பசி நன்ருக வெடுத்து, உ[...] தீபனப்படுத்தாத ஆஹாரத்தையும் உட்கொண்[]டார். 18-ம் தேதி இரவில் செய்ததுபோலவே 19-ம்தேதி காலையிலும் சிகித்ஸை செய்யப்பட்டது. ஆனல் உஷ்ணமான பாஷ்பஸ்நானத்திற்குப் பதிலாத ஆதபஸ்நானம் செய்வித்தேன். (நன்ருக வியர்வை வருமளவும் போர்த்துக்கொண்டு வெயிலில் படுத்திருப்பது ஆதபஸ்நானம் எனப்படுகிறது.) மறுபடியும் 20-ம் தேதி பாஷ்பஸ்நானமில்லாமலே ஆதபஸ்நானம் செய்யச்சொல்லி கடிஸ்நானமும் செய்யும்படி யேற்பாடு செய்தேன். (நாபிக்குக்கீழ் பிரதேசம் வரையில் அமரும்படி ஒரு தொட்[...]

* பாஷ்ப ஸ்நாநம்—நீராவியை தேஹத்திற் பரவச் செய்வது; இது ஆங்கிலத்தில் வேபர் பாத் (vapour bath) என்று சொல்லப்படும்.

யில் உட்கார்ந்திருத்தல் கடிஸ்நானம் என்று சொல்லப்படும்.) சிறிது நேரம் ஆதபஸ்நானம் செய்விக்கப்பட்டது. முதலில் இன்னும் எவ்வளவோ நீடித்தகாலம் படுக்கையில் விழுந்திருக்கவேண்டி நேரிட்டதென்று நினைத்தவர் 21-ம்தேதியே அருடைய வேலையைச் செய்வதற்கேற்ற சக்தி அவருக்கு உண்டாய்விட்டதைப்பார்த்து அவருக்கு அபரிமிதமான மனக்களிப்புண்டாயிற்று. பிறகு இரண்டு மூன்று நாள் வஸ்தி செய்துகொண்டார். அப்பால் 25-ம் தேதிமுதல் வஸ்திமுதலிய எவ்வித பிரயோகமுமின்றி மலம் தாராளமாய் கழிந்து வந்தது. அவருடைய சரீரம் ஆரோக்கிய நிலைமையில் இருந்துவருகிறது.

ஆகையால் நாம் இதைக்கொண்டு நிர்த்தாரணம் செய்வது யாதெனில்—உணவின் மூலமாய் ஏற்படும் கோளாறுகளாலேயே பெரும்பாலும் வியாதிகள் உண்டாகின்றனவென்றும், ஒரேவிதமான சிகித்ஸையினால் எல்லாப்பிணிகளையும் நீக்கலாமென்றும், ஆகவே வியாதிகளுக்கு அத்வைத தத்துவக்கொள்கையை நாம் அங்கீகரிக்கவேண்டியிருக்கிறதென்றும் தெரியவருகிறது என்பதே. சான்றோரது அபிப்பிராயமும் இதற்கு அநுரூபமாகவே யிருக்கிறதென்பதற்குப் பிரமாணங்களும் பலவுள.

“மருந்தினி வேண்டா யாக்கைக்
கருந்திய தற்றது போற்றியுணில்”

என்று யோகிச்ரேஷ்டரான நாயனருடையமேன்மைதங்கிய அபிப்பிராயத்தினாலும், பரிமேலழகரது புகழ்பெறும் உரையினாலும், மேன்மேலும் மருந்துகளைத் திணிப்பது அநாவசியகமென்றும், ஆஹாரப்பிசகால் நேரிடுகிற கெடுதிகளை உபவாஸாதிகளால் அல்லது ஆஹார நியமங்களாலேயே நிவ்ருத்திக்க வேண்டுமென்றும் நன்கு அறியலாம். ஆத்மஞ்ஞானத்தை மறைக்கக்கூடிய ப்ராக்ருத சரீரத்திற்கு ஏற்படும் பாபங்களின் பயன்களெனத்தகும் வியாதிகளை நிவாரணம்செய்ய ஜலத்திற்குள்ள மஹிமை அளவற்றதென்று நிச்சயித்தே, அநேக பாபங்களை நிவ்ருத்தி செய்ய ஜலத்தில் ஸ்நானம் செய்யவேண்டிய முறைகளையும், ஆசமனப்ரோக்ஷணாதிகளையும் ஹேமாத்ரிமுதலிய நிபந்தநகாரர்கள் அவரவரது நூல்களில் விரிவாகக் கூறியிருக்கின்றனர். தர்ம சாஸ்திரங்கள் யாவும் ஆரோக்கிய மார்க்கங்களை யுபதேசிப்பதற்கே ஏற்பட்டவை யென்பதை அனைவரும் நினைவில் வைக்கவேண்டும். ஜலத்திற்குண்டான மஹிமை இவ்வாறென்று சொல்லமுடியாது. சுத்தமான ஜலம் எவ்வித காரியங்களுக்கும் உபயோகமானதென்பதைக் கருதியே “ஆபோவா இதகும் ஸர்வம்” என்று வேதமும் கூறுகிறது. தர்மசாஸ்திரங்களிலுள்ள பிராயச்சித்த காண்டங்களைப் பார்த்தால், ஔஷதப்பிரயோகமின்றியே நமது சரீரதோஷங்களென்னும் வியாதிகளைப் பரிஹரிக்கும் முறைகள் வெகு நன்றாகக் கூறப்படுவதாய் அறியலாம். நமது வைத்தியர்கள் எவ்வியாதிக்கும் ஔஷதமே கதியென்றிராமல், இவ்வித ஸாமனிய விஷயங்களை நன்கு ஆலோசனை செய்து யுக்தியாகவும் சாஸ்த்ரீயமாகவும் சிகித்ஸை செய்ய முயல்வார்களாயின், ரோகங்களாலுண்டாகிற துன்பங்களுடன், ஔஷதப் பிரயோகங்களால் ஏற்படும் பலவிதமான இதர கஷ்டங்களும் அநேகமாய் ஒழிந்துவிடுமல்லவா? திரவியச் செலவும் விசேஷமாய் நேரிடாது. சாச்வதமான ஆரோக்கியத்தையும் எளிதில் பெறலாம்.

“கறந்தைத் தும்பையங்கண்ணி யெருக்கலர்
விறைந்த செஞ்சடை நீணில வெண்ணவே
பிறந்த மெய் சுத்தப்பையுட்பிடகமே
சிறந்து வாழ வெங்கந்தழி போற்றுவாம்.”

வைத்திய கலாநிதி.

ஆனந்த ஸூ வைகாசிமீ.

SANITATION IN INDIA.

இந்தியாவில் சுகாதார நிலைமை.

இந்தியா கவர்ன்மெண்டார் இத்தேசத்தில் சுகாதாரத்தை விருத்தி செய்வதற்காக நீண்டதான ஒரு தீர்மானம் பிரசுரித்திருப்பதைப் பெரும்பான்மையோர் அறிந்திருக்கக்கூடும். 1859-ம் வருஷத்தில் சுகாதார விஷயங்களை விசாரிப்பதற்காக ஒரு இராயல் கமிஷன் நியமிக்கப்பட்டது. இராணுவ இலாகாவைச் சேர்ந்தவர்களுடையவும், பொது ஜனங்களுடையவும் ஆரோக்கியத்தைக் காப்பதற்காக சில ஸானிடரி கமிஷனர்களை யேற்படுத்த வேண்டுமென்று அந்த இராயல் கமிஷன் 1863-ம் வருஷத்தில் சிபார்சு செய்தது. பிறகு லார்ட் டப்பரின் கவர்னர் ஜெனராலாயிருக்கும்போது 1888-ம் ஆண்டில் லோகல் கவர்ன்மெண்டுகளும், கிராமப்பஞ்சாயத்துகளும் இவ்விஷயத்தில் ஊக்கம் செலுத்தவேண்டுமென்கிற விஷயத்தை வற்புறுத்தி ஓர் தீர்மானம் செய்யப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்திலும் ஸானிடரி போர்டுகள் நியமிக்கப்பட்டன. இவ்வித உஷ்ண நிலைமையிலுள்ள தேசத்திற் கேற்றவாறு சுகாதாரமுறைகள் பல வழிகளில் சீர்திருத்தப்பட வேண்டியவைகளாயிருந்தன. அவ்வித ஏற்பாடுகளால் சில நகரங்களில் மட்டும் ஆரோக்கியம் அபிவிருத்தி செய்யக்கூடியதாயிருந்ததேயன்றி கிராமாந்தரங்களில் அம்முயற்சியினால் பலனில்லையென்றும், ஜனங்கள் அம்முயற்சியின் அருமையை அறியவில்லையென்றும் கவர்ன்மெண்டார் கருதவேண்டியிருந்தது.

சுகாதாரம் முதலானவற்றை விருத்திசெய்வதற்காக 1910-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டில் தனியாக ஓர் இலாகா யேற்படுத்தப்பட்டது. அந்தந்த மாகாணத்தின் கவர்ன்மெண்டு மூலமாய் ஸானிடரி கான்பரென்ஸுகள் நடத்துவதுடன், பம்பாய், சென்னை லக்னோ இவ்விடங்களில் விசேஷமாக எல்லா இந்திய சுகாதாரக் கான்பரென்ஸுகள் மூன்று தடவை முறையே நடந்தேறின. தொற்றுவியாதி முதலியவற்றின் தத்துவங்களையும் அவற்றைத் தடுப்பதற்கேற்ற வகைகளையும் தெரிந்துகொள்வதற்கேற்ற அநேக ஆராய்ச்சிகள் செய்வதன்பொருட்டு "இந்தியன் ரிஸெர்ச் பண்டு அஸோஸியேஷன்" என்கிற ஒரு ஸங்கமும் ஸ்தாபிக்கப்பட்டு, இவ்விஷயமான அறிவு அபிவிருத்தியாகுமாறு அநேக அரிய காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த பண்டுக்காக இந்தியா கவர்ன்மெண்டார் வருஷத்திற்கு ஐந்து லக்ஷம் ரூபாய் கிராண்டு கொடுத்து வருகிறார்கள். கிராமாந்தரங்கள் முதலான இடங்களில் ஆரோக்கியமுறைகளை விருத்தி செய்வதற்காக இந்தியா கவர்ன்மெண்டும், மாகாண கவர்ன்மெண்டுகளும் லோகல் போர்டு முதலானவைகளுக்கு இன்னும் பல வகையில் கிராண்டுகள் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

இவ்வளவுதூரம் முயற்சிகள் சிறப்பாக நடந்தபோதிலும், அம்முயற்சிகளுக்குப் பயன் மாத்திரம் வெகு மெதுவாக ஏற்படவேண்டியிருக்கிறது. இதுவரையில் இராணுவத்திலுள்ளவர்களை சுகாதாரமுறைப்படி வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்துவந்ததில், திருப்திகரமாகவே பலனுண்டானதாகத் தெரியவந்தது. அவ்விதமே பொதுஜனங்களையும் சுகாதாரக் குறைவிலிருந்தும் காப்பதென்பது ஸாதாரணமான காரியமல்ல. மாட்டுவண்டிகள் செல்லக்கூடிய பாதையில் மோடார்வண்டியை ஓட்டுவது ஸாத்தியமா ?

லார்ட் கர்ஸான் கவர்னர் ஜெனரலாயிருந்த போது இந்தியா கவர்ன்மெண்டுக்கு ஒரு ஸானிடரி கமிஷனரை ஏற்படுத்தினார்கள். இந்த உத்தியோகஸ்தர் சுகாதாரமுறைகளையும், கிருமிசாஸ்திர (Bacteriology) ஸம்பந்தமான விஷயங்களையும், இந்தியா கவர்ன்மெண்டுக்கு அறிவித்து வருவார்; அவ்வழிகளை யனுஸரித்து இந்தியாவிலெங்கும் இந்த இலாகா உத்தியோகஸ்தர்கள் காரியம் செய்துவருவார்கள். ஆனால் இவ்வேற்பாட்டில் சில அஸௌகரியங்கள் ஏற்படக்கண்டு, 1912-ம் வருஷத்தில் கிருமிசாஸ்திர ஸம்பந்தமான விஷயங்களும், காரிய விசாரணைகளைச்செய்து அவற்றை நிறைவேற்றும் விஷயங்கள் முதலியவைகளும் 'டைரக்டர் ஜெனரல் ஆப் இந்தியன் மெடிகல் ஸெர்வீஸ்' என்கிற அதிகாரியினுடைய வசத்தில் சேர்ப்பிக்கப்பட்டன. இப்பொழுது புதிதாக இருபத்தெட்டு சுகாதார உத்தியோகஸ்தர்கள் ஏற்படுத்தப்படுவார்கள். இச்சென்னைக்கு அடுத்த கிண்டியிலுள்ள கிங்ஸ் இன்ஸ்டிட்யூட் என்கிற ஆராய்ச்சி சாலையைப் போன்ற இந்தியாவிலுள்ள எல்லா ஆராய்ச்சி சாலைகளுக்குமாய் பதின்மூன்று உத்தியோகஸ்தர்களும், விஷப பரிசோதனைகள் செய்து வருவதற்காகப் பதினைந்து உத்தியோகஸ்தர்களும் ஆக இருபத்தெட்டு ஆபீஸர்கள் நியமிக்கப்படுவார்கள்.

மேலும் 1912-ஹு மேமீ 23௳ இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டுகளின் அபிப்பிராயத்தை யனுஸரித்து டிப்டி ஸானிடரி கமிஷனர்களை இன்னும் வேண்டிய வளவு நியமிப்பதாகவும் ஒரு தீர்மானம் செய்திருக்கின்றனர். ஸானிடரி இன்ஸ்பெக்டர்களையும் எண்ணிக் கையில் இப்பொழுதைவிட அதிகப்படுத்துவார்கள். இவர்களையெல்லாம் ஒவ்வொரு முனிஸிபாலிடியுள்ள ஊரிலும் வேலை செய்யும்படி நியமிப்பார்கள், இப்பொழுது இந்தியா கவர்மெண்டின் கீழுள்ள ஸானிடரி கமிஷனர் இந்தியா முடியவும் சுகாதார முறைகளை பரிசீலனை செய்து ஆங்காங்குள்ள உத்தியோகஸ்தர்களுக்கு இவ்விஷயமான உபாயங்களைப் போதிப்பதற்காக அப்போதைக்கப்போது பிரயாணம் செய்யும் ஆபீஸராக ஏற்படுத்தப்படுவார். ஆங்காங்கு அவசியமான விடங்களில் ஸானிடரி போர்டுகள் ஏற்படுத்தி, அந்த போர்டுகளில் சுகாதார இலாகா, வைத்திய இலாகா, இஞ்ஜனீரிங் இலாகா முதலியவற்றைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களையும், யோக்யதையுள்ளவரென்று கருதப்படும் மற்றும் பொது ஜனங்களையும் மெம்பர்களாகச் சேர்ப்பார்கள்.

சுகாதார இலாகாவில் மேல் உத்தியோகஸ்தர்களுக்குச் சாஸ்திரப்பயிற்சி செய்விப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப்பற்றிய விஷயம் இந்தியா கவர்ன்மெண்டாரின் ஆலோசனையில் இருந்து வருகிறது. தற்காலம் கல்கத்தாவில் ஸ்தாபிக்கப்போகிற உஷ்ணதேச வியாதிஸம்பந்தமான ஆராய்ச்சி சாலையில் (School of Tropical Medicine) விஷயங்கள் பயிற்சி செய்விக்கப்படலாம்; பிறகு காலக்கிரமத்தில் வேறு சில விடங்களிலும் அவ்வித சாஸ்திர ஸம்பந்தமான ஆராய்ச்சி சாலைகள் ஏற்பட்டால் அவ்விடங்களிலும், இவர்கள் பயிற்சி பெறலாம். ஸானிடரி இன்ஸ்பெக்டர்களைப் பயிற்சி செவிப்பதற்காகப் பிரதானமான எல்லா மாகாணங்களிலும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஒரு தலைமுறைக்கு முன் இரஹஸ்யமாயிருந்த விஷயங்களுள் அநேகம் தத்துவங்கள் இப்பொழுது பற்பல ஆராய்ச்சிகளால் இத்தகையன வென்று நன்கு விளங்கத் தொடங்கின. மெலேரியா என்று சொல்லப்படும் விஷம ஜ்வரம் கொசுக்களால் பரவி வருவதாக ஸர் ரோனல்ட் ராஸ் கண்டுபிடித்த அரிய விஷயமும்,

189 -ம் வருஷத்தில் நியமிக்கப்பட்ட ப்ளேக் கமிஷனால் செய்யப்பட்ட காரியங்களும் இந்தியாவின் சுகாதார முறையைப்பற்றிய சரித்திரத்தில் ஒரு விசேஷ ஸம்பவமாகக் கருதக்கூடிய வையாம். பிறகு கிண்டியில் ஏற்பட்ட கிங்ஸ் இன்ஸ்டிட்யூஷனும், அது போன்ற வேறு சில ஸ்தாபநங்களும் ஜனங்களுடைய ஆரோக்கிய நிலைமையைக் காக்க இன்றியமையாதவையாயிருப்பதுடன், சில ரோகங்களைத் தீர்ப்பதற்குவேண்டிய ஸீரம் எனப்படும் நிணநீர் முதலியதை வேண்டியவளவு சேகரிப்பதற்கும் அனுகூலமானவைகளா யிருக்கின்றன. காஸாலி, கூனூர் முதலிய விடங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ள ஆராய்ச்சி சாலைகளும் விஷய பரிசோதனை செய்வதற்கு மிகவும் அவசியமானவை. காசியிலும் அவ்விதமாகவே ஓர் ஆராய்ச்சி சாலை (Pasteur Institute) ஏற்படுத்தப்படும். பம்பாயிலும், ஆஸாம் மாகாணத்திலும் வேறிரண்டு அவ்வித சாலைகள் ஸ்தாபிக்கவேண்டுமென்று ஆலோசனையிலிருந்து வருகிறது.

1911-ம் வருஷத்தில் மேஜர் S. P. ஜேம்ஸ். I. M. S. என்பவர் பித்த விஷ ஜ்வரத்தை (yellow fever) த்தடுப்பதற் கேற்ற முயற்சிகளைச் செய்யும்பொருட்டு அவ்விஷபமான தத்துவங்களை அறிந்து வர அந்த ஜ்வரம் பரவியுள்ள விடங்களுக்கு அனுப்பப்பட்டார். பிறகு அவருடைய ஆலோசனையின்பேரில் ஸ்டெகோமியா (stegomyia) என்கிற கொசு ஜாதிகளைப்பற்றி விஷய பரிசோதனை செய்து அவற்றாலுண்டாகும் தீங்குகளைப் பரிஹரிப்பதற்கு வேண்டிய வழிகளை கல்கத்தா, பம்பாய், சென்னை, இரங்கூன், கராச்சி இவ்விடங்களில் ஏற்படுத்தவேண்டுமென்கிற விஷயமும் ஆலோசனையில் இருந்து வருகிறது. மலேரியா என்கிற விஷம ஜ்வரத்தைத் தடுப்பதற்கான முறைகள்(anti malaria schemes) 6,02,000ரூபாய் செலவில் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டன, காலரா வென்கிற விஷபேதி, கலா-ஆஜார் என்கிற ஒருவித ஸந்நிபாதஜ்வரம், சீதபேதி, குஷ்டரோகம் முதலிய வியாதிகளைத் தடுப்பதற்கான முயற்சிகள் இப்பொழுது யோசிக்கப்பட்டு வருகின்றன.

இந்தியன் ரிஸெர்ச் அஸோஸியேஷன் என்கிற ஸங்கத்தாருடைய பிரயத்தனத்தின் பேரில் சில வைத்திய சாஸ்திர நிபுணர்கள் இக்காரியத்தில் பிரவ்ருத்தித்து அநேகம் ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றனர். ப்ரொபஸர் மாக்மேஹன், டாக்டர் ஹாஸ்லாக், மிஸ்டர் ஹால்வெட் முதலிய ஐரோப்பியரும், டாக்டர் கார்கே, மிஸ்டர் அவதி முதலிய இந்தியர்களும் கலா-ஆஜார் முதலிய வியாதிகளின் தத்துவங்களைப் பரிசோதித்து வருவதற்கு வேண்டிய திரவிய ஸஹாயமும் செய்யப்பட்டு வருகிறது. இப்படி இராஜாங்கத்தாரும், மேற்படி அஸோஸியேஷனும் செய்துவரும் பெருமுயற்சிக்குப் பொது ஜனங்களும் ஸஹாயம் செய்து ஒற்றுமையுடன் உழைக்க முன் வருவதை கவர்ன்மெண்டார் ஆவலுடன் எதிர்ப் பார்க்கிறார்கள். மேற்படி அஸோஸியேஷன் மூலமாக "இந்தியன் ஜர்னல் ஆப் மெடிகல்ரிஸெர்ச்" என்கிற ஒரு பெரிய பத்திரிகை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. அதனுடைய முதல்மூன்று மாதத்திய ஸஞ்சிகைகளைப் பார்த்தாலே அதனால் மிகவும் நன்மை யுண்டாகு மென்று நிச்சயிக்கப்படும். கவர்ன்மெண்டார் தங்களுடைய மேற்பார்வையின் கீழ் ஏழு மாகாணங்களிலும் ஒன்பது ஸ்பெஷல் உத்தியோகஸ்தர்களை யேற்படுத்தி மேற்கூறிய ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பொழுது உஷ்ணதேச ஸம்பந்தமான வியாதிகளைப்பற்றி பற்பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகையில், விஷம ஜ்வரத்தைப் பிரதானமாகக் கவனிக்கவேண்டி வருகிறது. ஜ்வ

த்தினுல், நேரிடுகிற மரணங்களைப் பரிசோ
தித்து வருவதில், விஷமஜ்வரந்தான் இந்தியா
வில் வெகு தீவ்ரமாகப் பரவிவருவதாகவும்,
மஹாமாரி காலரா வென்னும் விஷூசி இவற்
றைப்பார்க்கினும் ஜனங்கள் அதிக அளவில்
விஷமஜ்வரத்தினுலேயே மாண்டுபோகிறுர்கள்
அல்லது பலவித துன்பங்களை அநுபவிக்கிறுர்
கள் என்றும் தெரியவருகிறது. இதற்காக
வேண்டிய அளவு கொய்னைவை ஜனங்களுக்கு
எளிதில் கிடைக்கும்படி பற்பல ஏற்பாடுகள்
செய்யப்பட்டு வருகின்றன. மேலும் இவ்வியா
தி பரவுவதற்கு ஸாதனமாயுள்ள கொசுக்களை
அழிப்பதற்கும் உபாயங்கள் கண்டுபிடித்து,
கொசுக்கள் வியாபித்துள்ள இடங்களைச் சீர்
திருத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்
தியாவில் விஷமஜ்வரத்தை ஒழிப்பதற்கு எல்
லா இடங்களிலும் எல்லா ஜனங்களுக்கும் ஒரே
விதமான ஏற்பாடு செய்வதற்கில்லை. ஆனுல்
இவ்வியாதியைத் தடுக்கவும் ஸ்வஸ்த்தம் செய்
யவும் கொய்னைவானது அனைவருக்கும் எங்
கும் நிச்சயமாக நற்குணம் தரக்கூடியதாயிருக்
கிறது. விஷமஜ்வர ஸம்பந்தமான விஷத்தை
ஒருவித கொசுக்கள் பரவச்செய்ய ஸாதனங்க
ளாயிருப்பதை யறிந்து, அக்கொசுக்களுக்கு
ஆதாரமான இடங்கள் பரிஷ்காரமாக சுத்தி
செய்யப்பட்டு, மறுபடியும் அவ்விடத்தில்
கொசுக்கள் உற்பத்தியாகாவண்ணம் தகுந்த
ஏற்பாடுகள் செய்து வருவதில் வேறு சில
புதிய விஷயங்களும் அறியப்பட்டு வருகின்
றன. உதாரணமாக மேஜர் லிஸ்டன் என்பவ
ரும்; டாக்டர் பெண்ட்லி என்பவரும் பம்பா
யில் இதைப்பற்றி அநேக பரிசோதனைகள்
செய்துவந்ததில், சேற்றுப் பாங்கான இடங்
களிலிருந்து இவ்வியாதியைப் பரவச்செய்யும்
கொசுக்கள் உற்பத்தியாவதில்லை யென்றும்
ஆங்காங்குள்ள வீட்டுக் கிணறுகளிலேயே
அவை உற்பத்தியாகின்றனவென்றும் நிச்சயிக்
கப்பட்டது. அண்டமான் தீவுகளில் வாய்க்
கால்ஓரங்களில் ஓடும் உவர்ப்பு நீர்களிலிருந்தே
இவ்வியாதியைப் பரவச் செய்யும் வேறு வித
மான சில கொசுக்கள் (M. Ludlowi) உற்
பத்தியாவதாக மேஜர் க்ரிஸ்டோபெர்ஸ் என்ப
வர் கண்டு பிடித்திருக்கிறுர். ஆகவே வீடுகளில்
உபயோகிப்பதற்கு ஜலத்தைக் கூடியமட்டிலும்
சுத்தமாகக் கிரஹிப்பதற்கு சுகாதார உத்தி
யோகஸ்தர்கள் தகுந்த ஏற்பாடுகள் செய்ய
வேண்டியதுடன், படித்தறிந்த பொது ஜனங்
களும் இவ்விஷயத்தில் ஒற்றுமைக்க வேண்
டும். இந்தியா கவர்ன்மெண்டார் இரண்டு வரு
ஷங்களுக்கு ஒருமுறை விஷமஜ்வரநிவாரணோ
பாயங்களை அநுபவ முறைப்படி போதிப்ப
தற்கு இரண்டு வகுப்புள்ள சில ஸ்தாபனங்
களை ஏற்படுத்துவதாய் நிச்சயித்திருக்கிறுர்கள்.
அவ்வகுப்புகளில் பயிற்சிபெறும் ஒவ்வொரு
நபரும் விஷமஜ்வரத்தைத் தடுப்பதற்கான
எல்லா வழிகளையும் நன்குணரும்படி ஏற்பாடு
செய்யப்படும். லக்னோவில் நடந்த சுகாதாரக்
கான்பரென்ஸில் விஷமஜ்வரதத்துவ பரிசோத
கரான ஒரு நிபுணரை இந்தியன் ரிஸெர்ச்பண்டு
அஸோஸியேஷனின் உதவியைக்கொண்டு இட
லி தேசத்திற்கு அனுப்பி இவ்விஷயமாய் இன்
னும் அநேக தத்துவங்களையறிந்துவரச் செய்
யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அவ்
வேற்பாடும் சீக்கிரத்தில் நிறைவேறுமென்று
நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

1905-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்ட ப்லேக்
ரிஸெர்ச் கமிஷன், அவ்வியாதியைப்பற்றி இன்
னும் பலவழிகளில் ஆராய்ச்சிசெய்து வருகின்
றது. அதனுல் ப்லேக் உற்பத்தியாவதற்கான
காரணங்களும், அது பரவுவதற்கேற்ற முகாந்த
ரங்களும் இப்பொழுது ஒருவாறு இவ்விதமெ
ன்று அறியப்படுகின்றன. இந்தியாவில் புப்புஸ
ஸம்பந்தமான மஹாமாரி (Pnemonic pla-
gue)உற்பத்தியாவது அபூர்வமென்றும் தெரிய

வருகிறது. இவ்வியாதிக்குக் காரணமான நுண்ணுயிர்கள் மனிதரிடமும் மற்றும் சில ஜந்துகளிடமும் பரவுவதற்கு எலிகள் ஸாதனங்களென்பதையும் அறிந்தோம். ப்ளேகானது எலிகளிடமிருந்து மனிதரிடம் எலிமக்ஷிகைகள் (Rat flea) என்கிற ஈக்களின் மூலமாய் ஸம்பந்திக்கும். இந்த நுண்ணுயிர்கள் (Plague bacills) மனிதர், சில மிருகங்கள், ஈக்கள் அல்லது எலிகள் இவற்றின் சரீத்திற்கு வெளியில் நீடித்தகாலம் ஜீவிக்கக் கூடாதவைகளாயிருக்கின்றன. இந்த வியாதி சிலமாதங்களில் மட்டுமே விருத்தியாய் வியாபிக்கக்கூடியதாயிருக்கிறது. பம்பாயில் முதல் தடவை இவ்வியாதி உண்டானபோது (அதாவது 1896-ம் வருஷத்தில்) வெகு சிரமப்பட்டு பரிசோதனை செய்ததில் 'எலிகள் இல்லாவிட்டால் ப்ளேகுமில்லை' யென்று ஒரு கொள்கை வெளியிட வேண்டியிருந்தது. அது முதல் இவ்வியாதியுண்டான விடங்களிலும், உண்டாகக்கூடுமென்று ஸந்தேஹிக்கப்படுமிடங்களிலும் எலிகளை அழிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவில் பெரும்பாலும் எலிகள் வாஸம் செய்யாத வீடு துர்லபம். எலிகள் ஸஞ்சரிக்க முடியாதபடி வீடுகளைக் கட்டுவதற்கு ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டும். ஆனால் அவ்விதம் செய்வது அனைவருக்கும் ஸாத்தியமானதல்ல. ஏனெனில் எலிகளால் பறிக்கமுடியாதபடி சுவர்களை வெகு கடினமாகவும் கனமாகவும் அமைத்து, வீட்டின் உட்புறத்தில் எங்கும் வெளிச்சம் பரவும்படி ஏற்பாடு செய்யவேண்டும். இருட்டறைகளும், குப்பையும், பலவித ஸாமான்களும் கண்டபடி நிரம்பியுள்ள வீடுகளும் எலிக்கு வாஸம் செய்ய யோக்யமானவையாம். சரீரத்திலுள்ள அழுக்குகளையும், வீடுகளிலுள்ள குப்பை கூளங்களையும் அப்புறப்படுத்தி, சரீரத்தையும் வீட்டையும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பது அவசியம். இனாகுலேஷன் செய்துகொள்வதால் ஒருவாறு ப்ளேக் வியாதியினிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம். இவ்வாறு ப்ளேக் வியாதியைத் தடுப்பதற்கு அநேக உபாயங்கள் தேடப்பட்டு, இப்பொழுது இன்னும் மேலான சில ஆராய்ச்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

காலரா வென்னும் விஷூசியானது சில வருஷங்களுக்கு முன் இந்தியாவில் தீங்கு விளைவித்ததுபோல் இப்பொழுது விசேஷமாகப் பரவக்காணோம். தற்காலம் ஸாதாரணமாய் ஒவ்வோரிடத்தில் உத்ஸவாதிகள் பிரபலமாக நடக்கும்போது ஜனங்கள் கூட்டங்கூடி அசுசி விருத்தியாவதால் இவ்வியாதி உற்பத்தியாவதாகத் தெரியவருகிறது. 1912-ம் வருஷத்தில் இவ்வியாதியைப்பற்றித் தீர விசாரிப்பதற்காக மேஜர் க்ரீக் என்பவர் நியமிக்கப்பட்டார். அவ்வாராய்ச்சி இன்னும் நடந்துவருகிறது. இந்த வியாதிக்குக் காரணமான ஸூக்ஷ்மாங்குரங்களை சில ஈக்கள் பரவச்செய்யலாமென்று கருதப்படுகிறது. இவ்வியாதி ஜலத்தின் மூலமாகவும் பரவலாமென்கிற பிராசீன கொள்கையும் ஒப்புக்கொள்ளக் கூடியதென்று நினைக்கிறார்கள்.

பெரியம்மை யென்று சொல்லப் படும் மஸூரிகாரோகமும் இந்தியாவில் இப்பொழுது விசேஷமாய் உண்டாவதைக் காணோம். சுமார் அரை நூற்றாண்டாக அம்மைக்குத்தும் வழக்கத்தை அபிவிருத்தி செய்யவே மஸூரிகாரோகம் குறைந்துவிட்டதென்று நன்றாக நிச்சயிக்கலாம்.

க்ஷயரோகமானது இந்தியாவில் தற்காலம் எல்லாவிடங்களிலும், முக்யமாய் பட்டணவாஸங்களிலும் வியாபித்திருக்கிறதென்பதில் ஸந்தேஹமில்லை. இதன் காரணங்களையும் தத்துவங்களையும் கண்டறிந்து இதைத் தடுப்பதற்கு இராஜாங்கத்தார் சில அதிகாரிகளை நிய

மிப்பதுடன் ஜனங்களும் அவர்களுடன் ஒற்றுழைக்கவேண்டும். இவ்விஷய பரிசோதனைக்காக இந்தியன் ரிஸெர்ச் பண்ட் அஸோஸியேஷன் மூலமாய் டாக்டர் லங்காஸ்டெர் நியமிக்கப்பட்டிருக்கிறார். வெகு ஸமீபத்தில் செய்த பரிசோதனைகளைக்கொண்டு இந்தியாவில் க்ஷயரோகம் மனிதருக்கு உண்டாகக் கூடியதேயன்றி மிருகங்களிடம் உற்பத்தியாகக் கூடியதாயில்லையென்று அறியப்படுகிறது. இந்தியாவில், காற்றோட்டமில்லாமலும், தகுந்தவெளிச்சமில்லாமலும், ஜனநெருக்க முள்ளதுமான இடத்தில் வஸிப்பதால் இவ்வியாதிக்கு இடமுண்டாகிறதென்றும் தெரியவருகிறது. இதற்காக இவ்வியாதியஸ்தர்கள் வஸிப்பதற்கேற்ற ஸகல ஸௌகரியங்களுமமைந்த ஆரோக்கிய வாஸஸ்தலங்களும் (Sanatoria), இவர்களுக்கென்று பிரத்தியேகமாக வைத்தியசாலைகளும் ஸ்தாபிக்கவேண்டுமென்று யோசனையிலிருந்து வருகிறது.

குழந்தைகளுடைய மரணம் நாளுக்குநாள் அதிகரித்துவரும் வரையில் பொது ஜனங்களுடைய ஆரோக்கியமுறை நன்றாகக் கவனிக்கப்பட்டதென்று கூறுவதற்கில்லை. இந்தியாவில் இவ்விஷயமும் முக்கியமாக கவனிக்கவேண்டியதாயிருக்கிறது. குழந்தைகள் அடிக்கடி மரித்துப் போவதற்குக் காரணங்கள் இவைதானென்று நிச்சயமாய் மொழியமுடியாமற் போயினும், குழந்தைகளுக்கு நேராகவே உண்டாகிற விஷமஜ்வரம் முதலியவற்றாலும், தாயார் மூலமாக உண்டாகிற சில வியாதிகளாலும், வேறு சில அபாயங்களாலும் அவை மிதமிஞ்சி மாண்டு போகின்றன. குழந்தைகளைப் பரிபாலிக்க வேண்டிய முறைகளைப் பற்றி ஒவ்வொரு வீட்டிற்கும் தாதிகளை அனுப்பி ஸ்திரீகளுக்கு அநேக வழிகளைப்போதிக்கச் செய்யும்படி பம்பாய், கல்கத்தா, சென்னை இம்முனிஸிபாலிடியார் பிரயத்னம் செய்து வருகின்றனர். இந்தியன் ரிஸெர்ச்பண்டு அஸோஸியேஷனின் உதவியைக்கொண்டு டெல்லியிலும் அவ்விதமே சில தாதிகளை ஏற்படுத்துவதாய் யோசனை.

எவ்வளவு ஏற்பாடுகள் செய்தபோதிலும் ஜனன மரணக்கணக்குகளை ஒழுங்கு படுத்தாவிட்டால், விசேஷமான சுகாதார முறைகளால் எவ்வளவு பிரயோஜனமுண்டென்று அறிவது அஸாத்தியமாயிருக்கும். இவ்விஷயத்தில் ஒழுங்காகக் கணக்குகளை ஏற்படுத்துவது பட்டணங்களில் ஒருவாறு ஸுலபமாயிருந்தபோதிலும், கிராமவாஸிகளிடமிருந்து சரியானபடி கணக்குகள் வருவது பெரிதும் கஷ்டமாய் முடிகிறது. இதற்காகப் பிரத்தியேகமாய் ரெஜிஸ்டிரார்களை நியமிக்க வேண்டியிருக்கிறது. கூடுமானல் அந்த ரெஜிஸ்டிரார்கள் வைத்தியங் கற்றவராயிருப்பது உசிதம். அப்பொழுது எந்தெந்த ரோகத்தால் அல்லது காரணத்தால் யாரார் மரித்தனரென்பது நிச்சயமாக ரிபோர்டு செய்யப்படும். பெரிய பட்டணங்களிலுள்ள ஹெல்த் ஆபீஸர்கள் இந்த ரெஜிஸ்ட்ரார்களை மேல் விசாரணை செய்து அக்காரியங்களுக்கு உத்தரவாதிகளாயேற்படவேண்டும்.

இந்நாட்டிலுள்ள பட்டணங்களில் அப்போதைக்கப்போது சேர்ந்துவரும் மலங்களையும், அழுக்குத் தண்ணீரையும் வெளிப்படுத்துவதில் இன்னும் விசேஷமான ஊக்கம் வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு காலங்களில் பட்டணங்களில் அழுக்குகள் விருத்தியாய் அவற்றின் மூலமாய் ஈக்கள் செழித்து, அவை, விஷூசி, மாஹாமாரி, சீதபேதி, க்ஷயரோகம், அதிஸாரம் இவற்றிற்கும்; குழந்தைகளுக்குப் பிராணாபாயத்தைத் தரும் வேறு சில வியாதிகளுக்கும் ஒருவாறு காரணமாகின்றன. கிராமங்களில் இவ்வேற்பாடில்லாமையால் சில ஸமயம் மிகுதியாக உயிர்ச்சேதமுண்டாகின்றது. எல்

லாவிடங்களிலும் அழுக்குகளைக் கழித்துவிடும்படியான முறைகளைக் கையாண்டு ஆரோக்கியத்தை நிலை நிறுத்த இராஜாங்கத்தார் யோசித்துவருகின்றனர்.

நகரங்களில் கிணற்றுஜலமும் குளம் முதலியவற்றின் ஜலமும் அசுத்தம் நிரம்பியிருக்குமாகையால், அவ்விடங்களில் குழாய்ஜலமே உபயோகிக்கக் கூடியதாயிருக்கிறது. குழாய் ஜலம் வடிக்கட்டி வெகு சுத்தமாக ஸப்ளை செய்யப் படுகிறது. அவ்விதம் செய்வதால் ஜலத்தின் மூலமாய்ப் பரவும் வியாதிகளும் உற்பத்தியாக வழியில்லாமல் அநேகம் ஜனங்களுடைய உயிர்கள் பாதுகாக்கப் படுகின்றன. இவ்விதம் ஜலத்தை வெகு சுத்தமாகக் குழாய்களின் மூலமாய் ஸப்ளை செய்வதில் முனிஸிபாலிடிகளுக்கு விசேஷமான செலவு நேரிடுகிறதாகையால், அந்த ஜலத்தில் உபயோகத்திற்கு வேண்டியதைத் தவிர அதற்குமேல் அதிகமாகச் செலவிடாவண்ணம் ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்துவருவது நலம்.

கெட்டுப்போன உணவுப் பொருட்களையும், பதன்கெட்ட ஔஷதச் சரக்குகளையும் கடைக்காரர்கள் விற்பனை செய்வதாகத் தெரிய வரும்போது, அவர்களை சுகாதார உத்தியோகஸ்தர்கள் விசாரித்து அவ்விதம் செய்யாமல் தடுக்க வேண்டும். பம்பாய் மாகாணத்திலும், ஐக்கிய மாகாணத்திலும் இவ்விஷயம் வெகு ஊக்கத்துடன் கவனிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் பால் ஸப்ளை எங்குமே சீர் குலைந்திருக்கிறது. விலையும் உயர்ந்துவிட்டது. பாலில் எவ்வித தோஷமும் கலக்காமல் சுத்தமாய் வைத்துக்கொண்டு விற்கக்கூடிய ஜனங்கள் அரிது. இந்தியாவில் பால்விற்கும் ஜனங்கள் சிறிதும் படிப்பில்லாத மூடர்கள். பசுக்களுக்குத் தீனி போடுவதிலும், அவற்றைத் தகுந்த விடங்களில் கட்டிவைப்பதிலும், அவற்றினிடமிருந்து பால் கறக்கவேண்டிய முறையிலும், பிறகு அப்பாலைச் சுத்தமாக வைத்து விற்கவேண்டிய விஷயத்திலும் வெகு ஜாக்கிரதையாயிரு வேண்டியிருக்கிறது. ஜனங்கள் ஒற்றுமையுடன் ஒரு கறவுசாலை (Dairy) ஏற்படுத்திக் கொண்டு சுத்தமான பாலை யுபயோகிக்க முயற்சி செய்வது நலம். சுகாதார ஆபீஸர்கள் பால் விற்பவருக்கு அப்போதைக் கப்போது எச்சரிக்கை செய்து அவர்கள் சுத்தமான பாலையே விற்கும்படியாக வற்புறுத்திவரவேண்டும்.

இவ்வாறு இந்தியாவின் சுகாதார நிலைகளை ஒழுங்குபடுத்தவேண்டு மென்று இந்தியா கவர்ன்மெண்டு செய்த தீர்மானத்தின் ஸாராம்சம் கூறப்பட்டது. மேலும் கிராமங்களின் சுகாதார நிலைமையை விருத்தி செய்வதற்கு ஊரூராய்ச் செல்லும் வைத்தியசாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்றும், ஜலஸப்ளை செய்யவேண்டிய முறைகளைச் சீர்ப்படுத்தவேண்டுமென்றும், அவ்விடங்களில் மருத்துவச்சிகளைப் படிப்பிக்கத் தகுந்த முயற்சிகள் அவசியமென்றும், மற்றும் சில சில்லரை விஷயங்களும் கூறப்பட்டுள.

இவ்வளவு ஏற்பாடுகளையும் நிறைவேற்ற அளவற்றத் திரவியம் செலவு செய்யவேண்டிவரும். இந்திய ஜனங்களில் பெரும் பான்மையோர் படிப்பில்லாமலும் பணமில்லாமலும் ஆரோக்கியக் குறைவையடைந்து வருகின்றனர். மேலும் இராஜாங்கத்தார் இந்தியாவின் சுகாதார நிலைமையை விருத்தி செய்ய இந்திய வைத்தியமுறைகளை ஆதரிக்கவேண்டும். இங்கிலீஷ் முறைப்படி எவ்வளவு வைத்தியசாலைகளை யேற்படுத்தினாலும், இந்திய வைத்திய முறைகளில் பெரும் பான்மையான ஜனங்களுக்குள்ள அபிமானம் மாறுமென்று நினைப்பதற்கில்லை. மேலும் இவ்வுஷ்ணதேச நிலைமைக்கு இத்தேசத்திய ஔஷத முறைகளைக் கொண்டு சிகித்ஸை செய்வது யுக்தமாயிருக்குமேயன்றி இதர ஔஷதங்களால் அவ்வளவு பயனுண்டாகு மென்று நினைப்பதற்கில்லை. இந்நாட்டின் சீதோஷ்ண நிலைமைக்குத் தகுந்ததான ஆயுர்வேத வைத்திய முறைப்படி வைத்தியர்களைப் பயிற்சி செய்வித்துக் கிராமங்களிலும் பட்டணங்களிலும் ஜனங்களுடைய ஆரோக்கியம் காக்கப்படலாமேயன்றி வேறு வகையில் எவ்வித ஏற்பாடுகள் செய்து விட்டபோதிலும், அப்பொழுதும் அநேகம் குறைகள் இருந்துகொண்டே வரும்.

AN AYURVEDIC FREE DISPENSARY NEWLY ESTABLISHED AT SRIRANGAM.

ஸ்ரீரங்கத்தில் புதிதாக ஓர் ஆயுர்வேத தர்ம வைத்தியசாலை.

வித்யாபிவ்ருத்தி விஷயமாகவும், தேவஸ்தானங்களின் சீர்திருத்த விஷயமாகவும் ஸ்ரீரங்கத்தில் பலவித தர்மகாரியங்களை ஏற்கனவே செய்துவருவதில் ஊக்கங்கொண்டவரும், பெரிய தனிகர் என்று அப்பக்கங்களில் பிரஸித்தி பெற்றவருமான ஸ்ரீமான் R. K. பிரஸன்ன வெங்கடேசராவ் அவர்கள் ஸ்ரீரங்கத்தில் ஓர் ஆயுர்வேத தர்மவைத்திய சாலையை ஸ்தாபித்து ஆயுர்வேத வைத்தியத்தை மேன்மைப்படுத்த முன் வந்ததைப்பற்றி நாம் ஸந்தோஷப்படுகின்றோம். சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பாக மிஸ்டர் பிரஸன்ன வெங்கடேசராவ் அவர்கள் சென்னையில் ஸ்ரீமான் வைத்தியரத்னம் பண்டித கோபாலசாரியர் அவர்களிடம் ஏதோ சிகித்ஸை செய்துகொள்ள வந்தபோது, ஆயுர்வேத வைத்தியாபிவ்ருத்தி விஷயமாக அநேக விஷயங்களை எம்முடன் கலந்து பேசினார்கள். இப்பத்திரிகையின் ஆசிரியரான நாம் திருச்சியிலும் ஸ்ரீரங்கத்திலும் சில வருஷங்கள் ஸொந்தத்தில் வைத்தியம் செய்துகொண்டிருக்கையில், எம்மைப்பற்றி அடிக்கடி விசாரித்திருப்பதால் சென்னையில் மிஸ்டர் ராவ் அவர்கள் முதலில் எமதிடம் இவ்வைத்தியாபிவ்ருத்தி விஷயமாய் ஸல்லாபம் செய்ய ஸம்பந்த மேற்பட்டது. அப்பொழுதே சென்னை ஆயுர்வேத காலேஜைப்பற்றிய பிரஸ்தாபமும் வந்தது. இக்காலேஜுக்கு ஸஹாயம் செய்பவர் அரிதாயிருக்கிறதென்றும், மிஸ்டர் ராவ் அவர்களைப் போன்றவர்கள் ஏதாவது தகுந்த ஸஹாயம் செய்வது மிகவும் அவசியமென்றும் நாம் அவர்களைக்கேட்டுக் கொண்டதுண்டு. பிறகு அவர்களே தாராளக்கொள்கையுடன் சென்னை ஆயுர்வேத காலேஜுக்கு 1000 ரூபாய் நன்கொடையாக உதவினார்கள். இச்சென்னையில் அவர்கள் நம்மைப்பார்த்தது முதற்கொண்டே அவர்களுடைய உத்தேசம் ஆயுர்வேத முறையை அபிவ்ருத்தி செய்வதில் ஊக்கமுள்ளதாகவே தோற்றிற்றென்பதை குறிப்பிடுவதற்கு அவ்விதம் கூறினோமேயன்றி, நமது வேண்டுகோளை ஆதரித்தே அவர்கள் காலேஜுக்கு உதவி செய்தனர் என்று சொல்ல வரவில்லை. பிறகு நமது ஸ்ரீ கன்னிகா பரமேச்வரீ ஆயுர்வேத ஆஸ்பத்ரியில் நாங்கள் வேலை செய்யும் ரீதிகளை நேரில் காண்பதற்கும் இரண்டு மூன்று முறை மிஸ்டர் ராவ் அவர்கள் வந்ததுண்டு. நாம் ஆஸ்பத்ரியை நடத்தும் மாதிரிகளைப்பற்றியும் மிகவும் ஸிலாகித்து எழுதிவிட்டுப் போனார்கள். இவ்வளவு தூரம் நேரில் பேசும்பொழுதெல்லாம், ஆயுர்வேத வைத்தியாபிவ்ருத்தி விஷயமாக மிஸ்டர் ராவ் அவர்கள் ஏதோ செய்ய உத்தேசித்திருக்கவேண்டுமென்றே அபிப்பிராயப்பட்டோம். எமதிடம் சிறிதேனும்—வற்புறுத்திக் கேட்கப்பட்ட ஸமயத்திலாவது—ஒரு ஆயுர்வேத தர்மவைத்தியசாலை ஸ்தாபிப்பதாகக் குறிப்பிட்டிருப்பார்களேயானால், ஆயுர்வேதத்தின் அபிவ்ருத்திக்குப் பிரதானமாய் செய்யவேண்டியது இன்னதென்று தெரியப்படுத்தியிருப்போம்.

ஆயுர்வேத வைத்தியத்தை அபிவ்ருத்தி செய்ய முன் வருபவர், அதற்கு முதலில் செய்யவேண்டிய காரியமென்னவென்பதையே நிர்க்காலோசனை செய்து நிச்சயிக்கவேண்டும். அப்பொழுதுதான் தர்மார்த்தமாகச் செலவிடப்படும் திரவியம் நற்பயன் விளைவிக்கும். ஆயுர்வேத வைத்தியாபிவ்ருத்திக்கு முதன் முதல் செய்யவேண்டியகாரியம், ஆயுர்வேத ஔஷதங்களை சாஸ்த்ரீயமாகத் தயார் செய்யவும், அவ்வௌஷதங்கள் ஆயுர்வேத வைத்தியர்கள் அனைவருக்கும் எளிதில் ஸுலபமான விலைக்குக் கிடைக்கச் செய்யவும் முயற்சிக்கவேண்டும். இப்பொழுது ஒரு வைத்தியர் செய்கிற ஔஷதம் மற்றொரு வைத்தியரால் செய்யப்படாமலும், ஒரு வைத்தியர் உபயோகிக்கும் மருந்தை மற்றொரு வைத்தியர் உபயோகிக்க முடியாமலும், ஓர் ஔஷதத்தின் தன்மைகள் ஒரு வைத்தியரால் சொல்லப்படுகிறவிதமே மற்றொரு வைத்தியரால் சொல்லமுடியாமலும் இப்படி ஆயுர்வேத ஔஷதம் வைத்தியர்களுக்குள்ளேயே பலவித ஸந்தேஹங்களுண்டுபண்ணுமாறு தாறுமாறாயிருக்கின்றது. ஒவ்வொரு ஔஷதத்திற்கும் உபயோகிக்கக்கூடிய பிரமாணங்கள் (Doses) எவையென்று ஒரு ஆயுர்வேத வைத்தியரும் சொல்லமாட்டார். அவ்வௌஷதங்கள் சரீரத்திற் பிரயோகிக்கப்பட்ட பிறகு எந்தெந்த தாதுவில் எவ்வெவ்விதமான செயல்களைச் செய்கின்றனவென்று தத்துவப்படி விஷயங்களை

யுணர்ந்த ஆயுர்வேத வைத்தியர்கள் மிகவும் அரிது. ஆகவே இராஜாங்கத்தார் இவ்வைத்திய முறையை ஆதரிக்க முன்வரமாட்டோ மென்கிறார்கள். ஆகை யினால் ஆயுர்வேத வைத்தியாபிவ்ருத்தியில் அபிமான முள்ள மிஸ்டர் பிரஸன்ன வெங்கடேசராவ் அவர்க ளைப்போன்ற கனவான்கள் முதலில் ஆயுர்வேத ஔஷ தங்களை முறைப்படி தயார் செய்வதற்கு ஒரு ஔஷத சாலை ஸ்தாபிக்க முன் வந்திருப்பார்களானால் மிகவும் உத்தமமாயிருக்கும். இப்பொழுது ஆயுர்வேத வைத் திய சாலைக்காக 30,000 ரூபாய் மூலதனம் ஏற்படுத்தி னார்களே. இந்த 30,000-த்துடன் இன்னும் சில பிர புக்கள் சேர்ந்து குறைந்தது 1,00,000 ரூபாய் மூல தனம் வைத்து ஒருபெரிய ஔஷதசாலையை ஸ்தாபிப் பது அஸாத்தியமான காரியமல்ல. அவ்விதம் ஸ்தா பிக்கப்படுகிற ஔஷதசாலையில் நல்ல அனுபவசாலி களும் சாஸ்திரஞ்ஞருமான சில ஆயுர்வேத வைத்தியர் களை ஔஷதநிர்மாணத்திற்காக ஏற்படுத்தலாம். ஒவ்வோர் ஔஷதத்திலும் சேர்க்கப்படும் வஸ்துக் களையும், பக்குவம் செய்த பிறகு ஒவ்வோர் ஔஷதத் திலும் எந்தெந்த சரக்கு எவ்வெவ்விதமாக எவ்வளவு பிரமாணத்தில் சேர்ந்திருக்கின்றன வென்பதையும், அவற்றின் குணகுணங்களையும், பிரமாணங்களையும் (Doses) பரிசோதித்துத் தீர்மானம் செய்ய ஒரு ரஸா யன சாஸ்த்ர விற்பன்னரை (Scientist) ஏற்படுத்தி, ஔஷதங்கள் உலகில் எங்கும் ஒரே சீராக உபயோகிக் கப்படுமாறு (Standardise) அவற்றின் பிரமாணம் முத லியவற்றை ஒழுங்காக ஏற்பாடு செய்யலாம். அப் படி ஏற்பாடு செய்துவிட்டோமானால், அநேக ஆங்கில வைத்தியர்கூட நமது ஔஷதங்களை உபயோகிக்க முன்வருவர். இப்பொழுது ஸ்ரீரங்கத்தில் மிஸ்டர் ராவ் அவர்களால் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தர்ம வைத்திய சாலைக்கு ஔஷதம் எங்கிருந்து வரப்போகிறது? இனி புதிதாக ஔஷதங்கள் செய்து, அதன் பிறகல் லவோ வைத்தியசாலையை ஸ்தாபிக்கவேண்டும்? இவ் வித வைத்தியசாலைகளுக்கும், ஸொந்தத்தில் பிராக் டீஸ் செய்யும் வைத்தியர்களுக்கும் மிகவும் குறைந்த விலையில் சாஸ்த்ரீயமாகத் தயார்செய்யப்பட்ட மருந்து களும் எளிதில் கிடைக்குமாறு ஓர் ஔஷதசாலையை ஸ்தாபிப்பது அவசியமென்று நமது இந்தியர்களு டைய மனதில் தோற்றாமலிருப்பதைப்பற்றி வருந்து கிறோம். ஸொந்தத்தில் பிராக்டீஸ் செய்யும் வைத்தி யர்களும், ஆயுர்வேத தர்மவைத்திய சாலைகளில் வேலை செய்யும் வைத்தியர்களும் ஒரே ஒழுங்கான வழியைப் பின்பற்றாமல், ஏதேதோ சிரமப்பட்டு மருந்துகளைச் செய்வதற்கே அவரவர்களுடைய காலங்களைக் கழிக்க வேண்டி யிருக்கிறதேயன்றி, ரோகிகளைப் பார்ப்பதற் கும், அப்போதைக்கப்போது அந்தந்த நிலைமைகளுக் கேற்றவாறு பரீக்ஷித்து ரோக பரிஹாரார்த்தமான முயற்சிகளைச் செய்வதற்கும் அவர்களுக்கு அவகாச மில்லாமற்போய் விடுகிறது. முதலில் ஔஷதசாலை களை ஸ்தாபித்தால், அவ்வௌஷதங்களின் விற்பனை யினால் திரவியமும் விருத்தியாகும். அதிலிருந்து வரும் இலாபங்களைக்கொண்டு, ஆயுர்வேத ஸம்பந்த மான இன்னும் அநேக ஆராய்ச்சிகள் செய்ய வழி ஏற் படும். அதன்பிறகு ஆயுர்வேத தர்மவைத்திய சாலை களை ஸ்தாபிப்பதும் உசிதமாகும். அப்படி ஸ்தாபிப் பது எளிதாகப் போய்விடுமாதலால், அவ்வித தர்மத் தைச் செய்ய இன்னும் பல தர்மாத்மாக்கள் முன் வரு வார்கள். நமக்கு முன்னதாகத் தெரிந்திருந்தால், இந்த 30,000 ரூபாயை மூலதனமாகப்போட்டு மிஸ் டர் ராவ் அவர்கள் ஒரு டைரக்டராக இருந்து கொண்டு, இன்னும் சில பிரபுக்களையும் தூண்டி, குறைந்தது, 1,00,000 ரூபாயாவதுசேர்த்து ஓர் பிர தான ஔஷதசாலையை ஸ்தாபிக்க வேண்டுமென்றே கேட்டுக்கொண்டிருப்போம். சிந்தாதரிப்பேட்டை யில் பலவருஷங்களாக பிராக்டீஸ் செய்துவரும் ஆயுர் வேதபூஷண K. சுப்பிரம்மணியசாஸ்த்ரி யவர்களை, அல்லது ஆயுர்வேத பூஷணமென்னும் பட்டம்பெற்று வெளியூரில் பிராக்டீஸ் செய்து கொண்டிருக்கும் ஸீனியரான வேறு சிலரையாவது மேற்படி தர்ம வைத்தியசாலையில் வைத்தியராக நியமிக்காமல், ஐந்து மாதங்களுக்குமுன் பாஸ்செய்த ஒருவரை அந்த ஸ்தா னத்திற்கு நியமித்திருப்பதற்கும் காரணம் தெரிய வில்லை. எவ்வாறாயினும் இப்புதிய ஆயுர்வேத தர்ம வைத்தியசாலை அவ்விடத்திய ஜனங்களுக்கு நன்மை யளித்து, ஆயுர்வேத முறைக்கும் ஒருவாறு மேன் மையை யுண்டுபண்ணுமானால் அதுவே நமது கோரிக்கையை ஒருவாறு பூர்த்தி செய்ததாகும்.

DRUGS AND MEDICINES.

ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

வேப்பம்பட்டை.

கிராமங்களில் முதிர்ந்த வேப்பமரப்பட்டைகள் ஏராளமாய்க் கிடைக்கும். பட்டணங்களிலும் கடைகளில் வேண்டியவளவு சொற்பவிலைக்கு இப்பட்டை விற்கப்படுகிறது. எவ்வித ஜ்வரங்களுக்கும் இதை ஆயுர்வேத வைத்தியர்கள் உபயோகிக்கிறார்கள். சில நாளாக ஆங்கில வைத்தியர்களும் இதை விஷமஜ்வரங்களுக்கும் குளிர் ஜ்வரத்திற்கும் கொடுத்து வருகிறார்கள். வேப்பம்பட்டையை நன்றாக முறிய உலர்த்தி சூர்ணமாக இடித்து வஸ்திரகாளிதம் செய்துவைத்துக்கொள்ளலாம். ஜ்வரம் விட்டபிறகு மேற்படி சூர்ணத்தில் 60 நெல்லெடையெடுத்து வெந்நீருடன் தினத்திற்கு மூன்று அல்லது நாலு தடவைவீதம் உட்கொள்ளலாம். அல்லது 2 பலம் பட்டையை இடித்து ஒருபடி ஜலத்தில் சேர்த்து கால்படியாகக் காய்ச்சி, வேளைக்கு அரை ஆழாக்குவீதம் தினத்திற்கு மூன்று வேளை கொடுக்கலாம். இக்கஷாயத்தையும் ஜ்வரம் க்ஷீணிருக்கையில்தான் உபயோகிக்கலாம். ஜ்வரம் குணமான பிறகுகூட, அதனால் நேரிட்ட பலஹீனத்திற்கும், அக்னி மாந்தியத்திற்கும் இக்கஷாயத்தை உபயோகிப்பது நலம். மேலும் சிறிது இலவங்கமாவது, இலவங்கப் பட்டையாவது இக்கஷாயத்தில் பொடித்துச்சேர்த்தால் அதன் வீரியம் அதிகப்படும்.

சதகுப்பை.

ஒன்றரைப் பலம் சதகுப்பையின் விதையைச் சிதைத்து, அரைப்படி கொதிக்கிற ஜலத்தில்போட்டு மூடிவைத்து, இரண்டு மூன்று மணிநேரம் சென்றதும், ஆறினவுடனே வடிகட்டி ஒரு தடவைக்கு ¼ அவுன்ஸ் முதல் ½ அவுன்ஸ்வரையில் தினத்திற்கு நாலைந்து வேளை வாலிபருக்கும், அவ்வளவில் பாதி குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். இந்த கஷாயத்தில் சிறிது சர்க்கரையும் சேர்த்துக்கொள்ளலாம். இவ்விதம் இதை உபயோகிப்பதால் குழந்தைகளுக்காவது வாலிபர் அல்லது வயதானவர்களுக்காவது உண்டாகும் வயிற்றுப்பொருமல், அஜீர்ணம் அல்லது வேறு காரணத்தாலுண்டாகும் வயிற்றுவலி, வாயுவினாலுண்டாகும் இதரவலிகள் இவை குணமாவதாக அநுபவத்தினால் அறியப்பட்டிருக்கிறது.

தேங்காயெண்ணெய் மூட்டைப்பூச்சிகளை அழிக்கும்.

டாக்டர் ஜாக்ஸன் என்பவர், தேங்காயெண்ணெய் மூட்டைப்பூச்சிகளை அழித்து விடுமென்று எழுதுகிறார். இப்பூச்சிகள் பதுங்கிக்கிடக்கும் இடங்களிலெல்லாம் சிறிது தேங்காயெண்ணெயை ஒரு சிறு குச்சுமூலையால் எடுத்துவிடவும்; அல்லது பலகை முதலியவற்றின் சந்துகளில் இவை புகுந்திருந்தால், அவ்விடங்களில் தேங்காயெண்ணெயை பொட்டுப்பொட்டாக விடலாம். எந்த வைத்தியசாலை அல்லது ஆஸ்பத்திரிகளிலும், எந்த வீடுகளிலும், எவ்விதமான நாற்காலி கட்டில் படுக்கை முதலியவைகளிலும் சிறிதளவு இந்த எண்ணெயை யுபயோகிப்பதால் வெகு சீக்கிரத்தில் மூட்டைப்பூச்சிகள் அழிந்துவிடுமென்பதில் சந்தேகமில்லை; இதை யுபயோகித்ததும் சிறிது நேரத்திற்கெல்லாம் மூட்டைப்பூச்சிகளாலுண்டான பாதையைக் கொஞ்சமும் அநுபவிக்கவேண்டி நேரிடாது. தேங்காயெண்ணெயை உபயோகிப்பதால் ஒரு பதார்த்தமும் கெட்டுப்போகாது. இந்த எண்ணெய் பெரிய மூட்டைப்பூச்சிகளையும், அவற்றின் முட்டைகளையும், குஞ்சுகளையும் பற்றறவே ஒழித்துவிடும். (இண்டியன் மெடிகல் கஜெட்—Indian medical gazette.)

புகையிலையும் இருதயமும்.

புகையிலையை அடிக்கடியும் தொடர்ந்து உபயோகித்துவந்தால் இருதயத்திற்கு ஸம்பந்தப்பட்ட நரம்புகளின் சக்திக்கு இடையூறுண்டாகிறது; ஆகவே அதன் வேலை மந்தப்படுகிறது; அது காலக்கிரமத்தில் ஒழுங்கீனமாகவும் விட்டுவிட்டும் துடிக்க ஆரம்பிக்கும். ஆகையினால் பிராணாபாய முண்டாகுமாறு இருதயத்திற்கு அவ்வளவு பலக்குறைவு இதனால் ஏற்பட்டுவிடலாம். (டாக்டர்—The Doctor.)

கீல்வாயுவில் உப்பு நீர்.

சரீரத்திலுள்ள கீல்களில் எலும்புகளை ஒன்றோடொன்று பிணைக்க வெகு வன்மையான சில தசைநார்கள் (Ligaments) உண்டல்லவா? அந்த தசைநார்களும் எலும்புகளும் ஒன்றோடொன்று இழைந்து சிதைவுறாமலிருப்பதற்காக எண்ணெயைப்போன்ற ஒருவித திரவம் (Synovial infusion) உண்டென்பதும் சிலருக்குத் தெரிந்திருக்கலாம். அது குறைந்துபோவதால் கீல்களிலுள்ள எலும்பு முதலானவை ஒன்றோடொன்று இழைய ஆரம்பித்து விசேஷமாக வலியை யுண்டுபண்ணுகின்றன. அவ்வித நோய்களுக்கு மேலே உபயோகிக்க உப்புநீர் மிக உபயோகமானதென்று மிஸ்டர் T. ஹட்சின்ஸன் என்பவர் கண்டுபிடித்தாராம். ஒரு கம்பளித்துண்டை அதிக உப்பைக்கரைத்த ஜலத்தில் நனைத்து, நோய்கொண்ட கீல்களின்மேல் நன்றாகச்சுற்றி, அதன்மேல் எண்ணெயில் நனைத்த துணியையுஞ்சுற்றி, மேலே ஸாதாரண துணியினாலும் ஒரு சுற்றுப்போட்டு அவிழாமல் கட்டிவிடவும். அப்படியே இரவு முடிய படுத்திருக்கவேண்டும். இதனால் சீக்கிரம் குணமடையும். ஆனால் நன்றாக வலியும் எரித்தலும் குணமாகிறவரையில் தினந்தோறும் இரவில் இவ்விதம் செய்து வரவேண்டியது அவசியம். (மெடிகல் ரிகார்ட்—Medical Record,)

NOTES AND ITEMS OF INTEREST.

பலவகைக் குறிப்புகள்.

வயதின் சராசரி யளவு.

நானூறு வருஷங்களுக்கு முன் உலகத்தில் மனிதர் சராசரியாக பதினெட்டு முதல் இருபது வருஷம் வரையில் ஜீவித்திருந்தார்கள். நூறு வருஷங்களுக்கு முன் சராசரி முப்பது வருஷம் ஜீவித்திருந்தனர். இக்காலத்தில் மனிதர் சராசரி நாற்பது வயதுவரையில் பிழைத்திருக்கின்றனர். ஆகவே நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னைவிட இந்த நூற்றாண்டில் ஜனங்கள் ஆரோக்கிய மார்க்கத்தை அதிகமாகத் தழுவி நடப்பதாய் இவ்விஷயம் குறிப்பிடுகின்றது. இவ்வாறு மெடிகல் ரிவ்யூ (Medical Review) என்கிற பத்திரிகை கூறுகிறது. ஆனால், நானூறு வருஷங்களுக்கு முன்னிருந்த ஜனங்களுடைய ஜனனமரண ஸம்பந்தமான பதிவுக்கணக்குகளைப் பார்த்துதான் இப்பத்திரிகை மேற்கூறியவாறு எழுதிற்றோவென்று நாம் அறிய வேண்டியிருக்கிறது.

விஷமஜ்வர நிவாரணம்.

விஷமஜ்வரத்தை யுண்டுபண்ணும் கொசுக்களின் வர்க்கத்தை அடியோடே நாசப்படுத்துவதற்கான பெரு முயற்சி செய்யப்பட்டு வருகிறதென்று அமிருத பஜார் பத்திரிகை சொல்லுகிறது. தோண்டின இடங்களை மூடிவிடும் உபாயம் கையாளப்பட்டு வருகிறது. அதனால் கொசுக்கள் விருத்தியடையாமல் நசித்துப்போம். கொசுக்களின் உற்பத்திக்குக் காரணமான அழுக்கு ஜலத்தையுடைய குளம் குட்டைகளில் ஒரு ஜாதி மீன்களை விட்டுவைப்பதினால், அந்த மீன்கள் கொசுக்களையும் அவைகளின் முட்டைகளையும் தின்றுவிடுகின்றன. இம்முறைகளைக் கையாடி வரும் பம்பாயில், விஷமஜ்வரம் போன வருஷத்தைவிட இந்த வருஷம் குறைந்திருக்கிறது. விஷமஜ்வரத்தை யுண்டுபண்ணும் கொசுக்களை நாசஞ் செய்வதற்கு அவைகள் உற்பத்தியாகும் குளம் குட்டைகளில் மீன்களை விட்டுவைக்கும்முறை கைகண்ட பலனைக்கொடுப்பதாகும்.

கருப்பையில் குழந்தையின் போஷணை.

கர்ப்பிணிகளை அருகிலிருந்துகொண்டே போஷித்துவந்து பற்பல பரிசோதனைகள் செய்து பார்த்ததில், அவர்களுடைய போஷணைக்கும் கர்ப்பத்திலுள்ள சிசுவின் போஷணைக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லையென்று டாண்டி யென்பவர் கூறுகிறார். கர்ப்பிணிக்கு வேண்டியவளவு ஆஹாரம் கொடுக்கவேண்டியது அவசியமே, அவ்வுணவின்றேல் அவர் பலங்குன்றிவிருக்கக்கூடும். ஆனால் பற்பல பத்தியங்களையும், விசேஷமான போஷணைகளையுங்கொண்டு கர்ப்பத்திலிருக்கும் சிசுவை எவ்விதத்திலும் சீர்படுத்தவோ போஷிக்கவோ முடியாது. கர்ப்பத்திலிருக்கும் சிசுவானது இயற்கையாகவே தாயினுடலிலிருந்து இரத்தம் பரவுவதால் வளர்ந்து வருவதுமட்டும் பெரும்பான்மையோருக்குத் தெரிந்த விஷயம். கர்ப்பிணிகளுக்கு அநேகம் போஷணைகளைச்செய்தும் வயிற்றிலுள்ள சிசுவின் நிறை அதிகமாகவில்லையென்பதைப் பரீக்ஷித்துப் பார்த்தோமென்றும் அவர் வரைகிறார். (போஸ்டன் மெடிகல் அண்ட் ஸர்ஜிகல் ஜர்னல்—Boston med. Sur. Jour.)

குழந்தைகளின் வயிற்றுவலிக்குக் காரணம்.

குழந்தைகளுக்குண்டாகும் பெரும்பான்மையான அஜீரணவியாதிகளுக்கும் வயிற்றுவலிக்கும் குடலிலுண்டாகும் கோளாறே காரணமென்று அனேகம் வைத்தியர்கள் உடனே அபிப்பிராயப்பட்டு விடுகிறார்கள்; வேறு சிலர் உணவுகளின் தோஷத்தால் வயிற்றுவலி முதலியதுண்டாகலாமென்கின்றனர். ஆனால் வெகு ஸாதாரணமாய், அனுபவத்தைக்கொண்டு அறிந்தமட்டிலும் அஜீர்ணத்திற்கும், குடல்களின் கோளாறுகளுக்கும், இவற்றிற்கு மேலுண்டாகிற வயிற்றுவலிக்கும் பொதுக்காரணம் வேறுண்டு. அக்காரணம் வெகு ஸூக்ஷ்மமானதாயினும் மிகவும் ஸாமானியமானது. சில ஸூக்ஷ்மக்கிருமிகளே அவ்வயிற்றுவலி முதலியதற்குக் காரணமாகின்றன. குழந்தைகளின் வாயை நாம் சரியாகக் கழுவுவதில்லை. ஆகையால், மிகவும் ஸூக்ஷ்மமான நுண்ணுயிர்கள் குழந்தைகளின் பற்கள் அல்லது பல்லீறுகளிலும், வாயிலும், தொண்டையிலும் சேர்ந்திருந்து, உணவூட்டும்போது அவ்வுணவுடன் வயிற்றில் சென்று செழித்து வளர்ந்துவிடும். அதனால் முற்கூறிய வயிற்றுவலி முதலியதுண்டாகத் தடையென்ன? (ந்யூயார்க்மெடிகல் ஜர்னல்—New york med. Jour.)

கலப்பில்லாப்பாலினும் என் பால் சிறந்தது.

ஒரு மாஜிஸ்ட்ரேட் ஒரு பாற்காரனைப்பார்த்து "கலப்பான பாலைவிற்றதால் நீ குற்றவாளியாகிறாய்." என்று நியாயத்தை எடுத்துரைத்தார்.

"மேன்மைதங்கிய தர்மப்பிரபுக்கள் அவ்விதம் அபிப்பிராயப்படுவதற்கு ஆதாரம் என்னமோ தெரியவில்லையே; நான் ஒருபோதும் நியாயம்தவறி நடக்கமாட்டேனே," என்று பாற்காரன் கூறினான்.

நியாயாதிபதி—"ஆனால் பாலைப் பரிசோதிக்கும் க்ஷீரமானி யென்னும் கருவியே உன்னுடைய பாலில் நூற்றுக்கு 25 பங்கு ஜலம் இருப்பதாகத் தெரியப்படுத்துகிறதே!" என்றார்.

பாற்காரன்—"அப்பொழுது என் பால் கலப்பில்லாப் பாலினும் சிறந்ததே! பிரபுக்கள் தயவு செய்து நிகண்டுவில் 'பால்' என்கிற பதார்த்தத்தைப்பற்றி விவரிக்கும் பிரகரணத்தைப் பார்த்தால் தெரியவருமே! அதில் நூற்றுக்கு 80 முதல் 90 பங்கும் ஜலம் என்றல்லவோ கூறியிருக்கிறது! ஆனால் பாலுக்குப் பதிலாய் எட்டையா விற்கச்சொல்லுகிறீர்கள்!" என்று உடனே மறுமொழி கூறினான்.